ஞானசம்பந்தம்

மலர் 10.] கர௵ ஆடிமீ 10—8—51. [இதழ் 9.

திருவாரூர் நகர எல்லையில்



ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு வரவேற்பு.

ஆசிரியர்: நாகலிங்கத் தம்பிரான்.
உதவி ஆசிரியர்: ச. தண்டபாணி தேசிகர். தருமபுர ஆதீனம்.

திருவாரூர் சோமவார வழிபாட்டுக் கூட்டம்

23—7—51ல் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய வண்ணம் 30—7—51 திங்களன்று முதல் வார வழி பாட்டுக்கூட்டம் சிறந்தமுறையில் தொடங்கப்பெற்றது.

தேவாசிரிய மண்டபத்தில் - இராஜன்கட்டளை ஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது. குக ஸ்ரீகிருபானந்த வாரியார் அவர்கள் கூட்டத்தைத் திறந்துவைத்துப் பேசினார்கள்.

மாணவ மாணவியர் - ஆடவர் பெண்டிர் உள்பட ஏறத்தாழ நானூற்றுவர்கூடிச சிவானந்தவாரியுள்ளே ஒன்றும் இரண்டும் அறத்தோய்ந்தனர். திரு. V. S. தியாகராஜமுதலியார் அவர்களின் தந்தையார் கூட்டம இனிதின்நிகழப் பேருக்கம அளித் தார்கள். திரு. T. N. சபாபதிமுதலியார் அவர்களும் சிவவேடப் பொலிவொடும தம் இனத்தவர் புடைசூழ வந்து பங்குகொண்டார்கள். உயர்நிலைப்பள்ளி மாணவரும் நீறணியும பேறுபெற்றனர். திரு. G. இராமானுஜ முதலியார் அவர்களும ஊக்கஉரை கூறினார்கள்.

6—8—51 திங்களன்று வாரவழிபாட்டு இரண்டாவது கூட்டம் மிகச்சிறிய முறையில் நடைபெற்றது. திரளான மக்கள் கலந்து கொண்டார்கள. தேவாரபாராயணத்துடன் வழிபாடு நடந்தது.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் ஜன்மநக்ஷத்திரத் திருநாள்

தருமபுர ஆதீனம ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்மநக்ஷத்திர நாட்களில், தேவாரமபெற்ற சிவதலங்களில் அபிஷேக ஆராதனைசெய்வித்துத் தலப்பதிக வெளியீடும வழங்கிவருதல்போல இம்மாதத்திலும 7—8—51 அன்று திருப்பட்டீசரத்திலும திருச் சத்தி முற்றத்திலும அபிஷேக ஆராதனை செய்வித்துத் தலப்பதிக வெளியீடுகளும் வழங்கப்பெற்றன.

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 10] கரஹ ஆடி மீ 10—8—51. [இதழ் 9

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினாய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

அவரவர்கள் கடமையை : : அவரவர்கள் செய்கிறார்கள்

நாட்டிலே எங்கும் பட்டினியும் பஞ்சமும் தாண்டவ மாடுகையிலே - பல வகைகளிலே மக்கள் கஷ்டப்படுகையிலே மதப்பிரசாரம் நடக்கின்றது; மக்களை அடக்க மதப்பிரசாரம் நடசகிறது என்று இளமையில் பேசலாம். பசியைப் போக்க வழிதேட வேண்டியது அவசியந்தான். உணவு கிடைப்பது நம் கையில் இல்லை. உணவுக்காக உழைப்பதுமட்டும் மனிதன் வேலை. அதற்கு உதவியாய் இருக்கக்கூடிய மழையோ, பருவமோ இறைவன் கட்டளைப்படி இயங்குகின்றன. நாம் கூடி வகுக்கும் திட்டங்களில் அவை அகப்படுவதில்லை. நாம் எல்லோரும் கூடி நாடுமுழுவதும் நெல் மலையாக ஆக்கி விடுவோம் என்று ஐந்து வருஷத் திட்டம் வகுப்போம். அன்னபூரண பிரதேசமாக ஆக்கிவிடுவோம் என்று அறிக்கைகளை விடுவோம். கடவுள் கருணை வேறு

விதமாக இருப்பதால் அன்னபூர்ணுக்கள் என்ற சோற்றுச்சாலைகள்வைத்துத் தொல்லைப்படுகிறோம்.

செயற்கை மழையைப் பெய்விக்கச் சிந்தனைசக்தி பார்க்கிறது. விஞ்ஞான உலகமாகிய மேலைநாட்டிலே இந்தியாவில் கடவுள் உணர்ச்சி என்ற சோம்பேறித் தனமான சிந்தனைசக்தி பெருகுகிறது; இப்படி மனிதன் சிந்தனையைப் பாழ்படுத்தலாமா என்று ஓநாய்க் கண்ணீர் வடிப்பார் உலகத்தில் பலபேர் உண்டு. இயற்கையான மழையை இடைஞ்சலில்லாதபடி உண்டாக்குகிற இயற்கைவசதிகளை இந்தியா எங்கும் பரவி யுள்ள மின்சார அலைகள் கெடுத்துவிடுகின்றன என்று இன்றைய விஞ்ஞானிகள் மெதுவாக வாய் திறக்கிறார்கள். வெளிச்சம் முதலியவற்றிற்காகக் கொண்டு வரப்பட்ட மின்சாரம் காற்றில் கலந்து வானத்தில் அலைவதால் மேகங்கள் கலைக்கப்பட்டுவிடுகின்றனவாம். காணப்படுகின்ற மேகங்கள் யாவும் கானல் நீராகப் போகின்றன. இப்படி இயற்கை மழை இல்லாமல் போகவே செயற்கை மழையை உண்டாக்கச் சிந்தனை சக்தி உண்டாவது எவ்வளவு விசித்திரம்? செயற்கை மழை உண்டாக்கச் செலவு என்ன ஆகிறது? சுண்டைக் காய் கால்பணம் சுமைக்கூலி முக்கால்பணம் என்றல்லவா ஆகின்றது. இந்த நிலையில் மனிதன் வகுக்கும் திட்டங்கள் உபயோகப்படாமல் வீணுகின்றன. பசிக்கின்றவனுக்குக் கோபம் அதிகம். ஆதலால் அவனை ஆத்திரப்படுத்துவது சுலபம். ஆனால் அதன் விளைவு என்ன என்று சிந்திக்கவேண்டும். நாடு கொந்தளிக்கும் நிலையில் அமைதியும், ஆக்க வேலைக்கான கிளர்ச்சிகளை உண்டாக்குவதுந்தான் அறிவாளி செய்யும் வேலை. எரிகிறநெருப்பில் எண்ணெய் ஊற்றுவதுபோலக் கிளறி விடுவது அறிவாளியின் வேலை அல்ல. இதை நேயர்கள் நன்றாகச் சிந்திக்கவேண்டும். தற்காலம் உலகில் கொந்தளிப்பு இருக்கிறது. அதனால் மக்கள் எல்லைமீறி அடிமைப்பாதையில் யாத்திரை போகாமல் இருக்க

மதத்தலைவர்கள் அறிவுச்சுடரைப் பரப்பி வருகிறார்கள். அமைதித் தெய்வத்தை அங்கங்கே தியானிக்கச் செய்கிறார்கள். அதற்காகவே வந்தவர்கள் அவர்கள். அவர்கள் கடமையும் அதுதான். அல்லாமலும் மதம் என்பது நல்லொழுக்கக் கட்டளைகள்தாமே. அவற்றைப் பிரசாரம் செய்வதை எல்லாக் கட்சியும் ஆதரித்துத் தானே ஆகவேண்டும்.

சமயச் சட்டங்கள் விரதங்களாக மக்களுக்கு உணவுத் தியாகத்திற்கு உதவுகின்றன. அப்படிப்பட்ட உணவுத் தியாகத்தை ஒவ்வொருவரும் செய்யவேண்டும் என்று மடாதிபதிகளும், ஆஸ்திகர்களும் பிரசாரம் செய்கிறார்கள். இதனால் நாட்டிற்கு எவ்வளவு உணவுப்பொருள்கள் மிச்சமாகும்?

ஆஸ்திகர்கள் எல்லோரும் ஏதோ தம் அளவில் கடவுள், மோட்சம், மறுமை இன்பம் என்றுமறுமைக்கு வேண்டியதைக் கூறுகிறார்களேயன்றி கலகங்கள் விளைவிப்பதில்லை.

நாட்டில் உள்ள எல்லாக் கொள்கைக்காரர்களும் அவரவர்களுடைய கொள்கையைப் பரப்புவது இயற்கைதான். அதைப்போல ஒரு மதத்தலைவர் தமது கொள்கைகளைப் பரப்புவதில் என்ன தடை இருக்கிறது. ஒருகாலத்தில் பேசப்பட்டு வந்தது சைவமடாதிபதி வைஷ்ணவத்தைத் தாக்குவார் வைஷ்ணவ மடாதிபதி சைவத்தைத் தகர்ப்பார் இப்படி வீண்கலகங்களை விளைவிப்பவர்கள் மதவாதிகள் என்று. இன்றைக்கு மதவாதிகள் கடவுள் ஒருவர் உண்டு; மக்களுடைய அகவாழ்வும், புறவாழ்வும் தூய்மையாகச் சமயவாழ்வு அவசியம் தேவை என்ற உண்மையை எல்லோருக்கும் உரைக்க பெரியபுராணம், கம்பராமாயணம் முதலியவைகளில் இருந்து பேசுகிறார்கள். தனித்துப் பேசினால் மதச்சண்டை; கலந்து பேசினால் பிரசாரம்;

பேசாமல் இருந்தால் இந்த நிலையங்களால் என்னபயன்? என்றபேச்சு. இது எப்படி இருககிறது?

நாடு இன்றைககு இருககும நிலையிலே நமமைச் சுற்றிலும எததனையோ வஞ்சகர்கள் நாட்டைப் பார்தது வைததுகொணடு இருககிறார்கள. எத்தனையோ பயஙகர பூதங்கள் வாயைப்பிளநது விழுங்கக காத்துக கொணடிருககின்றன. இந்த நிலையிலே நாம் மொழி யாலும, சாதியாலும உதிரிகளாய்விடக் கூடாது. ஒற்றுமையும அமைதியும வளரவேணடும அதற்கு எநத விததியாசமுமில்லாத கடவுள நமபிககைவேண்டும என்று ஸ்ரீலஸ்ரீ மகாசநநிதானம அவர்கள் மாயூரததில நடநத பாராட்டுக கூட்டத்தில் அறிவுரை வழங்கினர் கள். அவர்கள பேசசிலே மொழிச்சணடை வேண்டாம; மொழி எனபது கருத்தை வளர்ககும கருவிதான்; உணர்சசியைத் தரும ஒரு உதவிதான; அதில் வேற் றுமை கூடாது என்றுகூறிய ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை மிக மிகப் பாராட்டுகிறோம.

நாட்டில் எத்தனையோ கட்சித் தொண்டர்கள் பிரசாரம் செய்கிறார்கள். எத்தனையோ ஆஸ்திக சிகா மணிகளும பிரசாரம செய்கிறாகள் எலலாக் கட்சிக காரரகளுககும பொதுமககள் அளவுககு மிகக ஆதரவு கொடுககிறாகளா? ஒரு மநதிரி அலலது ஒருகட்சித் தலைவா பேசுகிறார். கூடுகிறார்கள்; பின்பறற வேண்டும என்றுகூடக கருதுகிறார்கள. அந்தத் தலைவர் தமது கட்சி பரவச் செலவழிககிறார். அதே போல மதம் பரவ வேண்டுமானல சொததுரிமை மதததலைவர்களுககும், கோவிலுககும இலலாமல் இருநதால் மதம பரவுமா? இன்றைககு எததனையோ லட்சககணககாக இருககிற கட்சிப் பணங்களை அரசாஙகததிற்கு உரிமையாக்கி விடடால கட்சியைப் பரப்ப முடியுமா?

எப்படி கட்சிப்பிரசாரத்திற்குப் பணம் தேவையோ அதுபோல மதத்திற்கும பணம தேவைதானே. கட்சிப்

பணங்கள் ஊருக்கு ஒரு நிலையமாக பாங்கில் பணமாக இருக்கிறது. மடங்கள், கோவில் பணங்கள் நிலங்களாக இருக்கின்றன. அதற்குக காரணம் மககள் நாகரிகம தொடங்கிய காலந்தொட்டே தொடங்கி மககளுடைய நாகரிகததின் ஞாபகச் சினனங்களாக இருப்பவை கோவில்களும, மடங்களும. அவறறிற்கு உரிய சொத்துக்குள் அரசாங்கம் மாற மாற மாற்றிககொள்ளும் பணமாக இலலை. என்றைக்கும் மாருத நிலங்களாக இருக்கினறன.

நீதி என்பது எலலோருக்கும எப்பொழுதும் பொதுவில் அமைந்தது எனபது ஞாபகம இருககட்டும். 'முனிவரும மனனரும முன்னுவ பொனனுல முடியும' என்ற பொனமொழியை அனபர்கள் எண்ணிப் பார்ப்பார்களாக.

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பாம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயததின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0.

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்
தருமபுரம, மாயூரம P. O.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம்

திருவாரூர் விஜய நிகழ்ச்சி.

ஆடி மாதத்திற்கும திருவாரூருககும் நெருங்கிய தொடர்பு உண்டு. சுந்தரமூர்த்தி சுவாமிகளை நினைககும் பொழுது ஆடிமாதம் நினைவுககு வரும். இது நெடுங் காலமான ஞாபகம. இவ்வாண்டு ஆடிமீ 7உ (23-7-51) தருமையாதீனத்தின் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருவாரூர் ஸ்ரீ தியாகராஜர் தரிசனத்திற்கு எழுந் தருளிய பொழுது அநேக ஏறபாடுகள் நடந்திருந்தன. திங்கட்கிழமை விடியற்காலை 6-மணிககு உள்ளூர்ப் பிரமுகர்களாகிய வி. எஸ். தியாகராஜ முதலியார், டி. என். சபாபதி முதலியார் முதலிய பிரமுகர்கள் நாலுகால் மண்டபத்திற்கு வந்து விட்டார்கள். எடுபிடி களும் யானை முதலிய அலங்காரப் பொருள்களும் தயாராக நின்றுகொண்டிருந்தன. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நி தானம் அவர்கள் 7-மணி அளவில் அங்கே வந்தார்கள். வந்ததும் வி. எஸ். தியாகராஜ முதலியார் அவர்கள் வரவேற்று மாலை சூட்டினார்கள். கோவில் மரியாதை கள் கொடுக்கப்பட்டன. திருவீழிமிழலை சிவசுப்பிர மணியம், தருமபுரம அபிராமிசுநதரம முதலிய உயர்ந்த நாதசுர வித்துவான்கள் வநதிருந்தார்கள். மகாசந்நி தானம் அவர்கள் நாற்காலிசவாரியில ஆரோகணித் தார்கள். எல்லோரும் உடன்வர பட்டினப்பிரவேசம தொடங்கியது. புதுத்தெரு கோடியைத்தாண்ட மணி எட்டாகிவிட்டது. வடககுவீதி பழநி ஆண்டவர் கோவிலில் விபூதி பிரசாதம் பார்ககப் பெற்றது. வடககுவீதி வழியாகத் தேரடிதண்டபாணி முதலிய கோவில்களை வழிபட்டுக் கொண்டு தூவாயார்சந்நிதி யில் சென்று நின்றது. விசேஷ அர்ச்சனை வழிபாடுகள் நடைபெற்றன. அந்தக கோவில்தான் பரவையுள் மண்டளி என்னும் பாடல் பெற்ற ஸ்தலம். சரியாக 9 மணிககுத் தெற்குவீதியிலுள்ள இராஜாங்ககட்டளை கட்டளைமடத்திற்கு ஸ்ரீ-ல-ஸ்ரீ மாசந்நிதானம் அவர்கள்

திருவாரூர் நகராண்மைக்கழக மன்றத்தில்:

சேர்மென் தி. நா. சபாபதி முதலியார் அவர்கள் வரவேற்பளிக்கிறார்.

எழுந்தருளினார்கள். ஒன்பதரை மணி அளவிலே கொலுககாட்சி நடைபெற்றது. இராஜாங்கக்கட்டளை கட்டளை விசாரணை ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் மகாசந்நிதானம் அவர்களுக்குக் காணிகளை கண்டு வணங்கினார்கள். ஏனைய அடியார் களும் அப்படியே செய்தார்கள். கூட வந்த பிரமுகர்கள் அனைவரும் நமஸ்கரித்து விபூதி பெற்று மகிழ்ந்தார்கள். பிறகு வி. எஸ். தியாகராஜ முதலியார் அவர்கள் செய்திருந்த மாகேஸ்வரபூஜை ஏற்பாட்டின்படி காலை சிற்றுண்டி விருந்து நடைபெற்றது. பிறகு ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருவாரூர் நகராண்மைக் கழகத்திற்கு எழுந்தருளினார்கள்.

நகராண்மைக்கழகம மகரதோரணங்களால் அலங் கரிககப்பட்டிருந்தது. ஆதீன ஸம்பிரதாயப்படி வரவேற் புககுரிய நிகழ்ச்சிகள் அமைந்து இருந்தன. முனிசிபல் ஆபீஸ் வாசலுக்குச் சென்றதும் கழக உறுப்பினர் களும், தலைவரும் நீண்டதோர் மாலையிட்டு மகா சந்நிதானம் அவர்களை வரவேற்றார்கள். பூரண கும்பம் வைத்திருந்தார்கள். அர்ச்சனை மற்ற ஆராதனைகள் செய்யப்படடன மகாசந்நிதானம் அவர்கள் முனிசிபல் மீட்டிங் ஹாலுககுச் செலவதற்குமுன்பு புகைப்படம் எடுககப்பட்டது. அதில் கவுன்ஸிலர்களும் சேர்மனும் திரு ,வி. எஸ் தியாகராஜ முசலியார் அவர்களும் கலந்து கொண்டார்கள். பிறகு கவுன்ஸில் மீட்டிங் ஹாலுககுள் நுழைந்ததும் மகாசநநிதானம அவர்கள் தனககென்று அமைககப்பட்ட ஆசனததில அமர்ந்தருளினார்கள். நகராணமைககழகப் பள்ளி ஆசிரியர் திரு. கண்ணையா தேசிகரால் பஞ்ச புராணம பாடப்பெற்றது. ஆதீன இசை ஆசிரியர் சங்கீத பூஷணம் பி. சுவாமிநாதனால் தேவாரம் ஓதப்பெற்றது நகரமன்றத்தின் சார்பில் நகராண்மைக கழகத் தலைவர் டி. என். சபாபதி முதலியார் அவர்கள் வரவேறபுப்பததிரத்தை வாசித்து அளித்தார்கள். அது வருமாறு:-

தருமை ஆதீனத்தின் இருபத்தைந்தாவது குருமகா சந்நிதானமாக வீற்றிருந்தருளும் அண்ணலே !

இவ்வாரூர்ப் பெருநகரம் கன்றிழந்த ஓர்பசுவின் துயர்நீக்கத் தன்மகனைத்தேர்க்காலிலகிடத்தியமனுவேந் தன் முதல் பல வேந்தரது ஆட்சியாலும் - சமய குரவர் பாடலாலும் - குமரகுருபரர் போன்ற முனிபுங்கவர்களின். அருட் பனுவலகளாலும் - பெருந்தமிழ்ப் புலவர்களின் போற்றுதலினாலும் - கருநாடக' இசையை வளர்த்த தியாகய்யர் முதலியவர்களின் தோற்றத்தாலும் பழம் பெருமையில் சிறந்து விளங்குகின்றது. இவற்றிற்கெல் லாம் முடியமைததாறபோனறு - தங்கள் ஆதீனத்தின் முதற்குருவாய்ததிகழ்ந்த குருஞானசம்பந்தப் பெருமா னுககு ஞான குருவாய்த் திகழ்நத கமலை ஞானப்பிரகா காசா இவ்வூரிலவாழ்ந்தது இவவூருககு மிகசசிறப்பினைத் தருகின்றது. இவறறையெலலாம இன்று எண்ணிமகிழு மாறு எழுந்தருளுகின்ற தங்களை மனமுவந்து வரவேற் கின்றோம்.

சமயப் பணியொடு பொதுப்பணி பலவும் புரிந்துவரும் புண்ணிய !!

இந்நகர் ஸ்ரீ தியாகராஜஸ்வாமி ஆலயத்தோடு இணைந்துளள இராஜனகட்டளை தங்கள் ஆதீனததிறகுத் சொந்தமாயிருநது சிறந்தமுறையில நடைபெறுவது மககளுககு ஆதமீக உணர்வை வளர்த்து வருகிறது. இவ்வாறே தஙகள மேறபார்வையில பல தேவஸ்தானங் கள் தமிழ்நாட்டில பல பகுதிகளில் சிறந்தமுறையில் நடைபெறுவது மககளை நலவழிப்படுத்துவதற்கு ஏது வாக இருககிறது. ஆங்காங்கு சோலைகள் பலவளர்த்தும்- குளஙகள அகழ்ந்தும் - வேளாண்மையைப்பெருககுவதற் கான திட்டஙகளைக கையாணடுமவரும தங்கள ஆட்சி முறை நாட்டிறகுப் பலதுறைகளிலும நலம் பயககின் றது அணமையில மாயூரத்தில பலலட்சரூபாய் செலவில் அமைததுள்ள பி. ஜேப்பேறிலலம பொதுமககளுககு மிக மிகப் பயன்படும் என்பது பாராட்டுதற்குரியதாகும்.

இதுபோன்ற பொதுப்பணிகள்பல புரிந்துவரும் தங்கள் ஆதீனம் இந்நகர் இராஜன்கட்டளையில் பொதுமக்களின் குடிநீர் வசதிக்காக நீர்க்குழாய் ஒன்று அமைத்திருப்பது பொதுமக்களுக்குப் பெரிதும் பயன்பட்டு வருவதுகண்டு மகிழ்கின்றோம்.

அருளாட்சி செலுத்திவரும் ஆன்றசீர்த் தவத்தோய் !!!

இந்நகருக்கு எழுந்தருளியுள்ள தங்களிடம் இவ்வூர்ப் பொதுமக்கள் நலங்கருதி யாங்கள் வேண்டுவது உளது இப்பெரிய நகரில் ஒரே உயர்நிலைப்பள்ளி யிருப்பது போதாததாக இருக்கிறது. அதற்குத் துணையாக எங்கள் மன்றத்தில் நடுநிலைப்பள்ளி ஒன்று நடத்த எண்ணியுள்ளோம். அப்பணி நிறைவேறவேண்டிய சாதனங்களுடன் பள்ளியொன்று அமைத்துத்தர வேண்டுகிறோம. நிற்க நாட்டமிகு தண்டியடிகள் நாயனார் ஆற்றிய பெரும்பணி யை மறந்ததால் இவ்வூரில் கமலாலய தீர்த்தம மிகவும் மலின மடைந்துள்ளது. இததீர்த்தம பொதுமககள உபயோகத்திற்கு ஆகுமவகையில் செப்பம் செய்துதர வேண்டுகிறோம. நாட்டுமக்களின் நலங்கருதிப் பலதுறைகளிலும் பணியாற்றிவரும் தங்கள் ஆட்சி நீடுவாழ வேண்டுமென்று எல்லாமவல்ல இறைவன் திருவருளை இறைஞ்சுகின்றோம."

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் வரவேற்பினைப் பெருங்கருணையோடு ஏற்றுககொண்டு,

மெய்யன்பர்களே !

"இன்று ஒரு நல்லநாள். நாம் செல்வத்தியாகேசப் பெருமானை வணங்குவதற்காக இங்கு வந்தோம. உங்கள் கூட்டத்தில் கலந்துகொள்ளுமபடியான சந்தர்ப்பத்தை நீங்கள் அளிததீர்கள். நாம் வந்தது இறைவனிடமஉள்ள அனபால். நீங்கள் அளித்ததும் அன்புக் காணிக்கை. நீங்களும அன்புவெள்ளத்தால் வரவேற்றீர்கள். எல்லாம அன்பு மயம. அனபே சிவம. ஆண்டவனே அனபு வடிவானவன. நீங்கள கொடுதத பததிரத்தில் மனுச்சோழனைக் குறிப்பிட்டிருந்தீர்கள், மனுச்சோழன்

ஓர் அரசன். அவன் சமயத்திற்காக எவ்வளவு பணிகள் செய் திருக்கிறான். அரசியலுக்கும மதத்திற்கும் தொடர்பு இல்லை என்று சிலர் சொலலுவாாகள். உலகததில் சிறநத அநுபவ நூலாகிய பெரியபுராணததை ஆக்கித்தநதவர் ஓர் அரசியல்வாதி. முதல் அமைசசர். அவாதான் நமது சேக்கிழார் அவர் அரசியல வாதியாக இருநதும சமயத்திற்காகச செய்த தொணடுதான் அவர்களை இன்றைக்கும • இனி வருங்காலத்திலும நாம் நினைத்துக்கொண்டுவரசசெய்கிறது நம்முடைய மனுசசோழ னைப்பற்றிச் சேக்கிழார் "பண்ணில் வாழ்தரும மன்னுயிர்க் கெல்லாம கண்ணும ஆவியும் ஆம பெறும் காவலன்" என்று பாராட்டுகிறார். ஒரு நீதியைப் பாருங்கள்! இந்த மனுசசோழ னின் மகன் வீதிவிடங்கன் தேரில் ஏறி ஊர்வலம வருகிறான். அப்பொழுது ஒரு கன்று அகப்பட்டு இறந்துவிட்டது. கன்றை இழந்த பசு அரணமனைவாசலுக்கு ஓடிப்போய் ஆராய்சசி மணியை அடித்தது. வாயிற்காவலர்கள அரசரிடம பசுவந்து மணி அடித்தது என்று தெரிவிததார்கள். அரசன் மநதிரியைப் பார்த்து என்ன என்று கேடகிறான். மதிவல்ல மநதிரி சொல்லு கிறார் அரசகுமாரன்மேல் குறறம இல்லாதபடி. 'வளவ! நின் புதல்வன் ஆங்கோர...' என்று. இதனை ஊனறிக கவனியுங்கள். நின்புதல்வன் போங்கால் ஆன்கனறு தோக்காலிடை புகுந்து இறந்தது அக்கன்று தாமாக வநததே அல்லாமல் அரசகுமாரன் அஜாக்கிரதையாக ஓட்டி அரைக்கவில்லை. அது தானாக வலியவநது தேர்க்காலில் விழுநதது; அதுஅல்லாமலும அவன் தனியாகப் போகவில்லை. அளவில்தேர்த் தானைசூழச் சென்றான் இத்தனை தேருககும தப்பி இவன் தேர்க்காலில கன்று விழுந்தது ஒரு ஆசசரியம அல்லவா? அதுவும எங்கே போனான்? அரசுலாங் தெருவில் போனான். அநத வீதியிலே வேறு யாரும எந்த விலங்குகளும வரக்கூடாதல்லவா? அப்படியிருந்தும வந்தது வியப்பு. அதற்காக இநதத் தாய்ப்பசு வந்து இபபடி மணி அடித்து அறிவித்தது சரியாகாது என்று பொருள்படசசொனனார்கள்.

அரசன் இவ்வளவில் விட்டானா? விட்டிருந்தால் அவன் மனுசசோழனாக முடியுமா? எப்படி அந்தப்பசு ஆராய்ச்சிமணி அடித்தால் நியாயம கிடைக்கும என்று எணணிற்றோ; அது பசு

அல்ல. பகுத்தறிவு படைத்த உயிரே; ஆதலால் பசு இழந்த துன்பத்தை நாமும் அடையவேண்டும் என்று நீதிவழங்குகிறான். அதை இந்த முதல் அமைச்சர் என்னசொல்லுகிறார் பாருங்கள். "மனுவேந்தன் அருமந்த அரசாட்சி அரிதோ மற்று எளிதோ தான்" என்று வாயாரப் பாராட்டுகிறார். இப்படிப்பட்ட நீதி வழங்கப்பட்ட திருவாரூரிலே வாழ்ந்த மனுவேந்தனால் சமயமும் அரசியலும் ஒருங்கே பாதுகாக்கப்பட்டன. அரசியலில் அமைதி வேண்டுமானால், போட்டியும் பொறாமையும் நீங்கவேண்டுமானால் சமயத்துணை வேண்டும். நாம் அரசாங்கபீடத்திலே அங்கத்தினராக அமருவது எல்லாம் செல்வத்தியாகேசருடைய கருணையைப் பொறுத்திருக்கிறது. அவனது திருவருள் இல்லாமல் எந்த உயிர்க்கும் எதுவும் நடக்காது என்பதை நம்முடைய ஒவ்வொரு நிகழ்ச்சியும் காட்டிக்கொண்டேயிருக்கிறது.

மற்றும் ஒருபெரியவர் அப்பர் அடிகள். தொண்டினையே தமது முதற்பணியாகக் கொண்டவர். அவர் நமக்கெல்லாம் சொன்ன உபதேசம் என்ன பாருங்கள். என்கடன் பணிசெய்து கிடப்பது என்பதுதான். அதைப்போல நாம் ஒவ்வொருவரும் கடவுட்பணி செய்வதைக் கடமையாகக் கொள்ள வேண்டும். இந்த ஊரிலே பதினாலாயிரம் பேர்கள்வரை ஜனத்தொகை இருப்பதாக நமது அன்பர் சேர்மன் அவர்கள் சொன்னார்கள். கோயில் அவ்வளவுபேரும் இருந்து வழிபடக்கூடிய அளவு பெரிதாக இருக்கிறது. இதில் மூன்றுவிகித மக்களாவது தினம் கோயிலுக்குப் போவார்களா? இப்பொழுது உணவு இல்லை, உடை இல்லை என்று எங்கும் பஞ்சத்தைப்பற்றிப் பேசுகிறார்கள். இவைகள் உண்டாவதற்கு மழை அவசியம். மழை இருந்தால் ஒழிய உலகம் நடக்காது. அந்த மழையை மனிதனும் தன் முயற்சியால் உண்டாக்கிக்கொள்ள முடியாது. கடவுளாலே நாடு செழிக்கவேண்டும்; மழைபொழியவேண்டும்; கடவுளின் கருணையைப் பெறுவதற்குவழி நாம் அவரை வழிபடுவதுதான். எப்படி வழிபடவேண்டும்? இதை அப்பர் அடிகள் எவ்வாறு சொல்லுகிறார் பாருங்கள். "நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே" என்று. அப்படி வழிபட்டால் அருள் நமக்குக் கிடைக்கும். தியாகராசர் இருக்கிறாரே; இந்தத் தியாகராசர் அல்ல நிறை

செல்வத் *தியாகராசப்பெருமான். அவர் நமக்கு வேண்டிய எல்லாம கொடுப்பார். அதைச் சுந்தரமூர்த்திசுவாமிகள் சொல்லுகிறா பாருங்கள். வாங்கி வழக்கம கணடவர் மனிதனுக்குப் பணநதான தேவை அநதப் பணத்தை அளவு அறிந்து - வழி அறிநது செலவழிக்க அறிவு தேவை. அநதப் பணத்தால் இன்பங்கள் அநுபவிக்கவேணடும, அநத இன்ப உணர்சசி சிற்றின்பத்திற்குப் போகாமல் மெய்ஞ்ஞான இன்பமாக வேண்டும; அதற்கு எல்லாம அருள்செய்பவன் ஆரூர்த் தியாகராசப் பெருமான் என்று அறிவிககின்றா. அந்தப பெருமானுடைய அருளைபபெற காம செய்த பிழைகள் தடையாகக குறுக்கே நிற்குமே என்ற அசசம உங்களுக்கு வேணடாம என்று சொல்லுகிறார். நீங்கள எந்தப்பிழை செய்தாலும மன்னித்துவிடுவார் என்றும் சொலலுகிறா மன்னிப்பதோடுமட்டும அல்ல, அந்தப் பிழையை மறந்தேவிடுவாா எனறுகூடச் சொல்லுகிறார். என்ன கருணை பாருஙகள. அபபடிப்பட்ட கடவுளை நீங்கள் மறக்கக் கூடாது மனிதனது தேவைகள் எல்லாவற்றையும் மகிழ மகிழக் கொடுககிற கடவுளை நீங்கள் மறப்பது பாவம அல்லவா ?

நகரவாசிகளாகிய நீங்கள் அளித்த வரவேற்பு உங்களுடைய அன்பின் பெருக்கைக் காட்டுகினறது. இந்தப பத்திரத்தில் கமலாலய தீர்த்தத்தைச செப்பனிடுத்தவேண்டும என்று சொலலி இருககிறீர்கள் முடிந்த தொகையை இராஜாங்கக் கட்டளையிலஇருநது கொடுக்கிறேன. அனபர் வி. எஸ் தியாகராசமுதலியார் இருககிறார்களே அவர்கள் முயறசிசெய்யட்டும. அப்பொழுது தானுக எல்லாம வநதுவிடும. பொதுவாக எந்தப் பணியாக இருந்தாலும உங்களைப்போனற பேரன்பர்களுடைய ஒத்துழைபபு இருந்தால் வெகு இலேசாக எல்லாம இனிது முடியும.''

என்று ஆசி வழங்கினர்கள்.

பிறகு முனிசிபல கவுன்சிலர் ப. துரைசாமி செட்டியார் அவர்கள வந்தனேபசாரம கூறினர்கள். சந்தன தாம்பூலம் வழங்கப்பட்டது. மக்களுடைய பெருமகிழ்ச்சி

வெள்ளத்தில் நீந்திக்கொண்டு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருமடத்திற்கு எழுந்தருளினார்கள்.

மடத்திற்கு வந்ததும் மற்றும் ஒருமுறை கொலு விருக்கவேண்டும் என்றும். பாமாலைக காணிக்கைகளைப் பெற்றுககொள்ள வேண்டும் என்றும் அன்பர்கள் பலர் வேண்டிககொண்டார்கள். அவ்வண்ணமே ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் கொலுககாட்சி வழஙகினார்கள். அப்பொழுது ஜி. ரங்கநாத முதலியார், ஜி ராமானுஜ முதலியார், பாவா கோபாலசாமி முதலியார், வி. எஸ். தியாகராச முதலியார், தி கா. சபாபதி முதலியார் முதலிய அன்பர்களும் மஞ்சககொல்லை நாகப்பட்டினம் முதலிய வெளியூர்ப் பெருமககளும் வநதிருந்தனர் பெரிய சபை கூடியது.

தஞ்சை ஜில்லா செங்குந்த மகாஜன சங்கத்தாரால் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசிதது அளிககப்பட்டது. பினனர் சைவ ஆசாரிய சங்கம், தமபிரான தோழர் தமிழ்ச்சங்கம், அநபாயன் ஆஸ்திக சங்கம் முதலிய சங்கஙகள் வரவேறபுப் பததிரங்கள் வாசித்துக கொடுத்தன. இசைச்செலவி ஸ்ரீமதி தேவிபாரதியம்மை யாராலும் ஓர் பாமாலை படிககப்பெற்றது. அவைகள் இங்குத் தரப்படுகின்றன.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தார்

மெய்கண்ட சந்தானத்தின இருபத்தைந்தாவது
குருமகாசந்நிதானமாகத தருமையில் வாழும தவவேந்தே !

விஞ்ஞான முற்போககினாலும் மேலைநாட்டு நாகரி கத்தாலும், சமய வாழ்விற் சிறநதிருந்த நமநாடு இன்று அவ்வாழவை மறந்து நிற்கின்றது. ஓரோர் காலங்களில் சமய நெறிககு நெருககடி நேர்ந்த பொழுதெலலாம் உத்தமர் பலர்தோன்றி மககளை நன்னெறிப்படுததினர். அத்தகைய பெரியவர்களின பரமபரை விளங்க. நம் தென்னாட்டில திகழும மடாலயங்கள் பலவாகும. அவற் றுள் சைவத்தின் கண்ணாய்த் திகழும தருமையாதீனம்

செழிக்கவரும் குருமணியே! தங்கள் வரவால் யாங்கள் அடைந்தபேறு அளவிடற்கரியதே.

சைவத்துறையில் மக்களைச் செலுத்தும் தண்ணருள் மிக்ககுருவே!!

சமய குரவர் நால்வரும் காட்டிய வழியை இன்று சைவ உலகிற்குக் காட்டிவரும் தங்கள் அருளாட்சியை எண்ணி எண்ணி இன்பெய்துகின்றோம். மூலாதாரத் தலமாம் இவ்வாரூர்ப் பெருநகரம் தங்கள் வருகையால் இன்று என்றும் அறியாப் பேரின்பத்தில் திளைத்துக் கொண்டிருக்கின்றது. ஆடகேச்சுரம் முதல ஐந்தீச்சுரங்களிலும் அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. சித்தீச்சரத் தக்ஷிணாமூர்த்தியின் திருமேனி சந்தன அங்கியொடு சாந்தமளிக்கின்றது. பூங்கோயில் புண்ணியன் பூங்கோயிலிலிருந்து ஐம்முகங்களாலும் அருச்சனையை ஏற்கின்ற காட்சி கண்ணைக் கவர்கிறது. நிறைசெல்வத் தியாகப்பெருமானை இன்று முகுந்தன் அருச்சிக்கும் நிலை உள்ளத்தை ஒருவழிப்படுத்துகின்றது. கமலை நாயகியின் நவசக்தி ஆசனக் கண்கொள்ளாக்காட்சி யளிக்கின்றது. ஏனைய பரிவாரங்களுக்கும் பூசனைகள் முட்டின்றி நடைபெறுகின்றன. மாற்றுரைத்த விநாயகர், துர்க்கையம்பிகை, பரவையுள் மண்டளியம்மன் என்ற புறமூர்த்தங்களுக்கும் அபிஷேக அர்ச்சனைகள் பாங்குடன் நடைபெறுகின்றன. "குழலொலி யாழொலி கூத்தொலி, ஏத்தொலியோடு" இன்று ஆரூர்த்திருநகரம் பொலிவெய்துகின்றது. இவ்வாறெல்லாம் ஆலயந் தொழும் உண்மையினை அறிவுறுத்தும் தங்கள் கருணையினைக்கண்டு பேரின்பம் எய்துகின்றோம்.

தமிழும் சைவமும் தழைத்தினிதோங்கத்
தக்கனபுரியும தண்ணளிக்குரவ !!!

கருமையாதீனத்தில அரசிருந்த முனிபுங்கவர்கள் பண்டைநாட்களில் அரியநூல் பலயாத்துத் தமிழையும்

சைவத்தையும் வளர்த்தனர். இன்று தாங்களோ! ஆரம்பப் பள்ளிமுதல் கீழ்த்திசைக் கல்லூரி யீறான பலபல கல்விநிலையங்களை வைத்துப் புரந்து வருகின்றீர்கள். ஏழை மாணவர்கட்கு உண்டி, உறைவிடம் அளிக்கின்றீர்கள். அவருள்ளும் எங்களது மரபினைச் சார்ந்த சிறுவர்கள் இடம்பெற்று ஏற்றமுறுவது கண்டு யாங்கள் எங்கள் உளங்கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். அருட்குருவே! தங்கள் அருளாட்சி பல்லாண்டுகள் தழைத்தோங்கி நிலவத் தங்கள் திருவடிகட்கு வாழ்த்துக் கூறுகின்றோம்.

தம்பிரான் தோழர் தமிழ்ச்சங்கத்தார்

உலகினிலே நலமனைத்தும் உண்டெனினும் அவைதம்முள்
அலகிடுதற் கரியநலம் ஆத்துமிக நலமன்றோ

பரதகண்டம் அந்நலத்தால் பார்தனிலே சிறந்திடினும்
விரவுபுகழ்த் தென்றிசையே வீறுகொண்டு விளங்கிடுமே

சமயகோடிகளனைத்தும் தன்படியில் விளக்கமுற
அமைந்திடுமே சுத்தசைவம் அசைவ நெறிதழைக்க

சமயகுரு மாரவரைத் தந்ததிந்த பொன்னாடே
உமைபாகன் சந்தானம் உணர்வளித்த திந்நிலத்தே

சந்தான நெறியில்வரு சம்பந்த குருராயன
நந்தாத மரபினிலே நலமுடனே வரும்விளக்கே

ஆரூரில் வந்துதித்த அருள்ஞானப் பிரகாசன்
சீரூர வழிபட்ட சித்தீச் சரத்தினிலே

கல்லாலில் அமர்ந்தருளும் கண்ணுதலோன் அடிபரவி
எல்லாரும் ஏற்றமுற இயற்றுபணி வாழியரோ

தம்பிரான் தோழரவர் தமிழ்ச்சங்கம் தழைத்தோங்க
இன்பவா தரவளிக்கும் எழிற்குருவே வாழியரோ

மூர்த்திதலம் தீர்த்தமெல்லாம் முறைமையுடன் அடைபவர்க்கு
வார்த்தைதரும் எங்குருவே வையகத்தில வாழியரோ

தமிழ்நலத்தால் சைவமதைத் தழைத்திடவே செய்கின்ற
இமிழ்புகழ்சுப் பிரமணிய எங்குருவே வாழியரோ!

அனபாயன் ஆஸ்திக சங்கத்தார்

பூவிரி பொழில்சூழ் புண்ணியத் தருமை
மேவிய குருவாம் மெய்யுருக் கொண்டு
விளங்கிடும் முதல்வ விளம்புவ துடையேம்!
வளங்கெழு புவனமும் போகமும் எவையும்
உயிர்களுக் களித்தநின் ஒண்கரு ணைத்திறம்
உயிர்கள்தம் மாட்டுள ஊறுசேர் மலத்தால்
அறியா தலமரும் நெறிகளில் சென்று
வறிதே வினையால் பிறிதோர் சார்பிலாது
இறநதும் பிறநதும் ஏகுதல் தகுமோ
காட்டக் காணும் காட்சிய வாகலின்
வாட்டமற்று உயிர்கள் வந்தடி யடைய
நோக்க முதலாம் தீக்கைகள் புரிந்து
போக்குவீ டளித்திடப் புண்ணிய வேண்டுதும்
இலிங்க வடிவில் இயைந்திடும் உண்மையை
மலிந்திடும ஆலயம் மாண்புடன் பேணி
உணர்த்தும் அருளினை உளத்தினில் கொண்டோம்
அடியவர் பெருமையிவ் அவனி அறிதர
அடியரேம அமைத்தவிவ் வாத்திக சங்கம்
தங்களின் அருளால் தழைத்திடக் காண்டும்
மங்கிடா திப்பணி மாண்புடன் உயர
தலங்களி லெல்லாம் தக்கசொல் தொண்டுடன்
இலங்கிடும் பிறபணி இயற்றிட யாங்கள்
துணிவினைப் பூண்டோம் தூயஇச் சங்கம்
தணிவிலா தென்றும் தழைத்திட நின்கழல்
வாழ்த்தும் வேட்கையாம் வள்ளிய
தாழ்த்தும் சென்னி தாடலை எனவே.

சைவாச்சாரிய சங்கத்தார்

திருவளரும் பெருங்கயிலைச் செம்மல் நந்தி திருமரபு தழைககவருமு எங்கள் தேவே, தருவளஞ்சேர் தருமை நகர் தனனில மனனித தககசிவப் பணிகளையே நாளும் ்பணிப, பெருமைபெரு சைவமொடு தமிழும என்றும் பிறங்கியிட புரந்தருளும் பெருமை என்னே! இருநிலத்

தில் என்றென்றும் ஏற்றம் பெற்று எமது சைவம் தழைத்திடவே என்றும் வாழி!

கமலைவரு குருஞானப் பிரகாச வள்ளல் கலைமணமும் சிவமணமும் கமழப் பெற்றோ, அமலநிலை பெறத் தந்த எங்கள் ஆரூர் அருள்சித்திச் சரக்கல்லால் நீழலண்ணல், தமதுதிரு வடிமலரை உளத்தே கொண்டு தக்க முறை நல்லவருச் சனைகள் செய்தே, எமதுளத்தும் அவனருளே மன்னவேண்டி எழுந்தருளும் எங்கள்குரு இனிதுவாழி!

தருமைவரு முதற்குரவன் தகைசால் ஞான சம்பந்தப் பெருவள்ளல் முதலாவந்த, குருமணிகள் இருபானுன் காய்த்தி கழ்ந்த கோதில்லாச் சந்தான மரபு சேர்ந்த, குருமரபில் இருபானே டைந்தாய் எண்ணிக் கொள வரும்எம் குருமணியே பெருமை மிக்க, அருள் சுப்பிரமணியதேவே! அருள்பெருகி அவனியெலாம் தழைக்க வாழி!

மதுரை யமர் சொக்கலிங்கத் தருளால் போந்து வளர் ஆரூர் சித்திசரத்து அண்ணல் முன்னர், துதி புரிந்த குருஞான சம்பந்த ரவர்க்குச் சொல்லரிய தீக்கை தனைப் புரிந்துசைவம், அதுதழைக்க பூசையனுட் டான விதி முதலாம் அரியநூல் செய்தஞா னப்பிரகா சன்தன், மதுமலர்நல் அடிபரவ மடாலயம தமைத்து மாண் புடனே அம்மரபு வளர்த்து வாழியவே!

ஒருமரபு சைவாச்சா ரியரென்றேபேசி ஒதுக்கிடமும் இன்றியின்று உயர்வழிந்த ததனல், பெருமையுறு கிரியைநெறி பீடிழந்த தெந்தாய்! பேரருளா லிவ்வினத்தோர் அந்நெறியில்பயில, ஒருவழியைச் செய்வதன்றி உற்றகுலச் சிறார்கள் உயர்கல்வி ஏற்றமுடன் உலகியலிலவாழத், தருகையுடைத் தவகடலே தருமையர் குருவே தகுசைவ நெறிவளர்த்துத் தழைத்துவாழியவே!

திருக்கயிலை மரபென்றுந் திகழ்ந்துவாழி செம்மை பெறு சிவமணமே செழித்துவாழி! உருக்கமிகும் அடியவர்கள் உவந்துவாழி உயர்சைவப் பெருநெறியே ஓங்கிவாழி! திருத்தருமை ஆதீனம செழித்துவாழி! செம்மைபுரி அறப்பணிகள் சிறந்துவாழி! சிருத்தமிடும் ஒருத்தனருள் என்றும்எண்ணி நீணுடு சேணுடாய் நின்றுவாழி!

ஸ்ரீமதி தேவிபாரதி

அறத்திற் சிறந்த ஆதினத் தரசே
சிறத்தின் மிகுந்த திருமுன் வணக்கம்
நெடுநாள் தங்கள் நேர்மையைப் பற்றி
திடமாய்த் தெரிந்து திருமுகங் காணப்
பெரிதும் விழைந்தேன் பெருந்தகை வள்ளால்
அரிதிற் கிடைத்தில அப்பெரும் பாக்கியம்
முன்னுள் செய்த முயற்சியின் பயனுய்
இன்னுள் வந்து இசைநதது கண்டு
சடுதியில் வந்தேன் சனனிதி கண்டேன்
அடைந்தேன தங்கள அருள்வழி அன்பினை
தங்கள் அருளே தடமெனக் கொண்டேன்
சங்கையிற் பெரியோய் சமரசத் திருவோய்
ஆதர வொன்றே அடியேன் விருப்பம்
பூதலம் மீதினிற் பொலிவுறும் நாளிலே.

மகாசந்நிதானம் அவர்கள் இவற்றிற்கு ஆசி வழங்குகையில் மககளுககுக் கடவுள் வணககம இன்றியமையாதது. கடவுள் அவரவருடைய அன்பு எல்லைக்குஏற்ப அருள வழஙகுகிறுர். நாம்தினந்தோறும கோவிலுககுப் போக முடியாவிட்டாலும் வாரந்தோறும் ஒரு நாள் வகுததுககொணடாவது போதல் வேண்டும். அப்பரடிகள் சொலலுகினறுர் பாருங்கள். தலையே நீ வணங்காய் என்ற பாசுரததில் நமககுக் கைகள் கொடுத்தது அவனைக கூப்பி வழிபடுவதறகாகவே என்றும், கால்கள் கொடுத்தது வலம்வருவதற்காகவே

திருவாரூர் இராஜாங்கக்கட்டளை கட்டளைமடத்தில்:



ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் பெருமக்களும்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்:



திரு. வி. எஸ். தியாகராஜ முதலியார் அவர்களுக்கும்
திரு. தி. நா. சபாபதி முதலியார் அவர்களுக்கும்
பொன்னாடை போர்த்துதல்.

என்றும் அவர் குறிப்பிடுகின்றார். ஆதலால் வார வழிபாட்டுக் கூட்டம் ஒன்று இங்கே தொடங்குவது நல்லது. அதற்கு நமது சமய அன்பராகிய வி. எஸ். தியாகராஜ முதலியார் அவர்களும், மெய்யன்பராகிய ஜி. ராமானுஜ முதலியார் அவர்களும, நமது சபாபதி வள்ளல் அவர்களும் ஊககத்தோடு ஒத்துழைப்பார்கள். இதையே தொடக்கமாகவைதது ஒரு கழகத்தை அமைககலாமே என்று ஆணை தந்தார்கள். அப்பொழுது தமிழாசிரியர் இரத்தினதேசிகர் மகாசந்நிதானத்தின் ஆணையைச் சிரமேல தாங்கி வாரவழிபாட்டுக் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்தார். அதற்கு வி. எஸ். தியாகராஜ முதலியார் தலைவராகவும், ஜி. ராமானுஜ முதலியார் பொருளாளராகவும், இரத்தினதேசிகர், மில நடேச பிள்ளை இருவரும அமைச்சர்களாகவும், டி. என். சபாபதி முதலியார் போனற மறறவர்கள் உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுககப்பட்டார்கள். பிறகு கடவுள் வணககத்துடன கூட்டம முடிந்தது.

பின்னர் மாகேஸ்வரபூஜை சிறப்பாக நடந்தது. மாகேஸ்வர பூஜையை இவவளவு அழகான முறையில் நடத்தி வைத்தவர்கள் வி. எஸ். தியாகராஜ முதலியார் அவர்கள் ஆவர். மாலை ஐநதுமணி அளவில ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருககோவில வழிபாட்டுக்காக எழுந்தருளினார்கள். முறையே கோவில் வழிபாடு முடிந்தது. சிறப்பாக எலலாக் கோவில்களுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள செய்யப்பட்டன. திருவாரூரில் கோவிலுக்குள் 126 ஆலயங்கள் தான் தனியே உள்ளன. இவ்வளவுககும் அபிஷேக ஆராதனை நடந்தது. முககியமாக ஆடகேசம், அநந்தேசம், சித்தீசம, விஸ்வகன்மேசம், அறநெறி என்ற கோவிலுக்குச் சிறப்பாக நடைபெற்றன. கமலாம்பாளுக்கும நவசக்தி அர்ச்சனை நடைபெற்றது. நீலோற்பலாம்பாளுக்குச் சந்தனககாப்பு அலங்காரமும், அர்ச்சனையும் நடைபெற்றன. வன்மீகநாதப் பெருமானுடைய பூங்கோவில்

காட்சியை அந்த ஊர்ப் பெருமக்கள் யாவரும் மிகவும் அதிசயித்துப் பாராட்டினர். தியாகராஜர் சந்நிதியில் பந்தல் வெகு அழகாகப் போடப்பட்டிருந்தது. தியாக ராஜருக்கு முக்குக நாமார்ச்சனை நடந்தது. இந்த அர்ச்சனை விஷ்ணு தியாகேசப் பெருமானுக்குச் செய்த தாகும். இந்த அர்ச்சனை ஆண்டுக்கு 1, 2 தான் நடக்குமாம ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் இவைகளை எல்லாம் நடந்து முடிகின்றவரையில் சந்நிதியில இருந்து தரிசித்தார்கள். சிதீச்சரம் தக்ஷிண மூர்த்திக்குச் சந்தனகாப்பு அலங்காரம செய்யப்பட்டிருந் தது இந்த சந்நிதி கமலை ஞானப்பிரகாசர்க்கு அருளுப தேசமவழங்கிய இடமாதலின இங்கு ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம அவர்கள கண்ணப்பனெப்பதோர் அனபில் திளைத்து நினறு தியானவழிபாடாற்றினர்கள். இந் நிகழ்ச்சி மக்களைப் பரவசப் படுத்தியது. இவ்வாறாக ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம அவர்கள தியாகேஸ்வர தரிசனத்தைமுடித்துக்கொண்டு தருமைக்கு எழுந்தருளி னர்கள்.

தருமபுர ஆதீன வெளியீடு.

திருக்குறள் உரைவளம்

அறத்துப்பால்

உரைப்பகுதி, உரைவிளக்கப்பகுதி, மேற்கோள் பகுதி, ஒப்புமைப்பகுதி என்ற நான்கு தலைப்பில் உரைவளம அமைந்துள்ளது. கிரவுன்சைஸ் (1x4) 584 பக்கங்கள். விலை தபாற்கூலியுள்பட ரூ 7—0—0.

K. பாலநாதன்,
செயலாளா,
'ஞானசம்பந்தம்' காரியாலயம்,
தருமபுரம, மாயூரம P. O.

பாராட்டு உபசாரம்

3—7—51 முதலாகவே மாயூரம நகரவாசிகளுககுள் ஓர் பரபரப்பு. அளவிடமுடியாத ஆனநதம ஆதீனத் திலகட்டிமுடித்த மருததுவ நிலயததைப்பற்றிப் பாராட்டுவார்கள்; ஆதீனததைப் பாராட்டுவார்கள். திறப்பு விழாவில கூட மாயூரம கமிஷனர் அவர்கள் 'இன்று ஒரு சிறந்தநாள். பொன் ஏடடில பொறிககவேண்டிய நாள்' என்று பாராட்டிப் பேசியது நேயர்கள நினைவிலிருககலாம. இடமும பொருளும இருந்தாலும மககளின் ஒத்துழைப்பில்லாவிட்டால எககாரியமும சிறப்புற முடியாதல்லவா? ஆகவே மருததுவநிலயம நனறாக—சிறப்பாகக கட்டிமுடிகக ஒத்துழைத்த நகரப் பெருமககளுககும — சிறப்பாக நகராண்மைக கழக நிர்வாகிகளனைவர்கட்கும பாராடடுபசாரம செய்யவேணடும் எனறு ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசநநிதானமவர்கள தமது நிர்வாகிகளுககு உததரவளிததார்கள். யாவர்களுககும ஞாயிற்றுககிழமை விடுமுறைநாள்தானே; ஆகவின் 15—7—51 ஞாயிறன்று ஆதீன மடாலயத்தில் உபசாரம நடத்த ஏற்பாடுசெய்யப்பெறறது. யாவர்கும் அழைப்பு அனுப்பப்பட்டது இரவு 7-மணிககு யாவரும மடாலயத்திற்கு வந்துசேர்ந்தனர். அனைவர்ககும அறுசுவையுணவு அன்புடன அளிககப்பெறறது. விருநதுககு இசை நிகழச்சியும ஒரு அங்கம அலலவா? ஆகவே குறிப்பிட்டபடி 8-மணிமுதல் 10-வரை திருச்சி அகில இநதிய வானொலி நிலய இசைததமிழ் விததுவான பிரமஸ்ரீ K. C. தியாகராசன் & பார்ட்டியாரின கதம்ப இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

இவ்வாறு 'மாயூரநகருககே ஒரு அதிர்ஷ்டம்' என்று யாவரும போற்றுமாறு மருத்துவ நிலயததையும் கட்டி அதற்குவேண்டிய உபகரணப்பொருளகளையும வாஙகிவைத்து மாயூரம நகராணமைக கழகததிறகு அளித்ததோடு, நகரமககளுககும் ஆதீனத்தில உபசாரமும்

செய்வித்த ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் பெருங்கருணை திறத்தை மாயூரவாசிகள் பாராட்டுவதும் அவர்கள் கடமைதானே. அதற்கு இணங்க நகரமக்கள் ஒன்று சேர்ந்து 29—7—51 அன்று பாராட்டு விழா நடத்த ஏற்பாடு செய்தார்கள். இடமும் மாயூரம் முனிசிபல் உயர்நிலைப்பள்ளி என்று குறிப்பிட்டார்கள். சிலதினங்கட்குமுன்னரே ஆதீனத்திற்குவந்து 'சைவப் பெருமக்கள் சார்பில் அன்றைக்கு ஆதீன மடாலயத்தில் மாகேசுவரபூஜை செய்விக்க விரும்புகின்றோம். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் திருவுளம்பற்றி ஆணை தந்தருள வேண்டும்' என்று விண்ணப்பித்துக் கொண்டார்கள். அதன்படியே 29—7—51 ஞாயிறன்று காலை 10-மணி முதல் சொக்கலிங்கப் பெருமானுக்கு விசேஷ வழிபாடு நடந்தது. சைவப்பெருமக்கள் அனைவரும் தரிசனமுடித்து ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களிடம் திருநீற்றுப்பிரசாதம் பெற்றுக்கொண்டார்கள். மணி 12. உண்டிநாலு விதத்திலாறுசுவைத்திறத்தினில் ஒப்பிலா அமுது படைக்கப்பட்டது. ஆதீன அடியார் கூட்டங்களும், சைவப் பெருமக்கள் பலரும், ஏனைய அன்பர்களும், ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் உடனிருக்க திருவமுது செய்தருளினார்கள். இவ்வாறு மாகேசுவர பூஜை நடந்தேறிய பிறகு மகாசந்நிதானம் ஞான பீடத்தில் எழுந்தருளி அருள்வழங்கும் இடமாகிய பண்டாரக்கட்டில் பெருமக்கள் அனைவரும் சபை கூடினர். தஞ்சை மாவட்டக் கழக உபதலைவர் திரு. C. மருதவாணம் பிள்ளை அவர்கள் ஆதீனப்பணியைப் பாராட்டிப்பேசித் தமது நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்கள். புகைப்படம் எடுக்கப்பட்டது. இது பகல் நிகழ்ச்சி.

இரவு 7-மணி. மாயூர நகர் தருமபுர ஆதீன இலவச மருத்துவ நிலையத்தின் முன்புறம். மகரதோரணங்களாலும் விதானங்களாலும் அலங்கரிக்கப்பெற்ற பந்தல். எங்கணும் நீர் தெளிக்கப் பெற்றிருந்தது. பெருமக்கள்

தருமபுர ஆதீன மடாலய பண்டாரக்கட்டில்:



மாயூரம் நகரத்துச் சைவப் பிரமுகர்கள்செய்த மாகேஸ்வரபூஜையின்போது.

29—7—51 அன்று நடைபெற்ற மாகேஸ்வரபூஜையில்:



படாலய வடக்குமுகப்பில் பிரமுகர்கள்

பலரும் பெருங்கூட்டமாகக் கூடியிருந்தனர். திருவீழி மிழலை சகோதரர்கள், செம்பொன்னார்கோயில் சகோதரர்கள், திருவாவடுதுறை இராசரத்தினம், தருமபுரம் அபிராமிசுந்தரம் ஆகிய பிரபல நாதசுரவித்துவான்கள் தயாரிலிருந்தார்கள். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் சகல விருதுகளுடன் வெள்ளிப்பல்லக்கில் ஆங்கு எழுந்தருளியானார்கள். சம்பிரதாயப்படி கோயில் பிரசாதம் பார்க்கப்பெற்றது. அன்பர்கள் மலர்மாலைகள் சூட்டி அருச்சனை வழிபாடாற்றினார்கள். அங்கிருந்து கடைவீதி, பட்டமங்கலத்தெரு வழியாக மேளவாத்தியத்துடன் அழைத்துச்சென்றார்கள். முனிசிபல் ஆபீஸ் அருகில் வந்ததும் ஆபீஸ் நிர்வாகிகளுக்கு ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மலர்மாலை வழங்கினார்கள். அங்கிருந்து குறித்த இடமாகிய உயர்நிலைப்பள்ளியை அடைந்தார்கள். மணியும் 8 ஆயிற்று. அங்கும் பந்தல் அலங்காரம், மின்விளக்குகள். கூட்டமும அதிகம். கடவுள் வாழ்த்துடன் கூட்டம தொடங்கியது. திரு C. மருதவாணம பிள்ளை அவர்கள் தலைமை தாங்கினார்கள். அவர்கள் கூறிய பாராட்டுரை வருமாறு:—

மகாசந்நிதானம் அவர்களே, நண்பர்களே!

இங்கு நாம எதற்காக இவ்வளவு உற்சாகமாகக் கூடியிருக்கிறோம என்றால் நமது நகரமக்கள் சார்பாக ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம அவர்களைப் பாராட்டுவதற்காகத்தான். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பழைய வழக்கங்களிலிருந்து பொதுஜனங்களுக்கான சேவையில் ஈடுபட்டிருக்கிறார்கள். நீங்களும் பலகூட்டங்கள், மகாநாடுகள பார்த்திருப்பீர்கள. அவ்விதமிருக்கும நிலையிலே இவர்கள, இவ்வாறு நாடுமுன்னேற கல்விச்சாலை, மருத்துவசாலை முதலிய பல நலலகாரியங்களைச் செய்துவருகிறார்கள். தனிப்பட்ட - மதத்திற்குச் சொந்தமாக-மதத்திற்காக - மதசமபந்தமான காரியத்திறகாக - மதசம்பந்தமானப் பிரச்சாரத்திற்காகச் செலவுசெய்ய

வேண்டும் என்று இருககும்பணத்தைப் பொதுமக்களின் முன்னேற்றத்திற்சாகச் செய்யவேண்டிய நல்ல காரியங்களைச் செயதுவருகிறார்கள் அதைநாம எல்லோரும்கூடி அவர்களைப் பாராடடவேணடியது கடமை. அவர்கள் பொதுச்சேவையில் அதிகமாக ஈடுபடவேணடும் என்பதற்காகத்தான் இந்தமாதிரி கூட்டம கூடி, பாராட்டுகிறோம். இப்பொழுது அவகாசம் ஆகிவிட்டது. அதிகம் பேசவும இடமில்லை என்று நினைககிறேன்.''

பிறகு முனிஸிபல் மானேஜர் திரு. ஜகந்நாதம் பிள்ளை அவர்கள் கீழ்க்காணுமாறு அச்சிட்ட வரவேற்புரையை வாசித்தாகள். உயர்நிலைப்பள்ளியின் மாணவர்கள், ஆசிரியர்களின சார்பில வரவேறபுரை ஒனறு எழுதி வாசிககப்பெற்றது. அதுவும இங்குத் தரப்படுகிறது.

துறவு நிலைநின்று தொண்டுபல புரியும் தூயநற் பெரியோய்!

சிவம் எனும் செம்பொருள்வழி நின்று சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் செஞ்சொற் பெரும! மக்கட்குச் செய்யும் தொண்டே மகேஸ்வரனுக்குச் செய்யும் தொண்டு என்ற முன்னோர் மொழியை உள்ளத்திற்கொண்டு மாசறு பொதுப்பணி பல மகிழ்வுடன செய்துவரும மறைமுனிவ! அடியார கூறிய அன்பு வழி நினறு படியார், பாமரர், பஞ்சையர் இன்னார் வாழ அறம் பல புரியும் ஆதமவீர! தாஙகள் ஆட்சி பீடம ஏறி ஆறு ஆண்டுகள் தான் ஆயின. ஆயினும் ஆற்றிய தொண்டுகள அளவிடற்கரியன. அனைவரும் அன்பு வாழ்வு மலர்நது அறிவுணர்ச்சி மேலோங்க இன்பமுடன் தமிழ் நாட்டார் எழுப்பியனவே எழிலுடைக் கோவில்கள். ''கோவில் இலலாஊரில் குடி இருக்கவேண்டாம்'' என்ற முதுமொழிக்கேற்பத் தெருவிற்கொரு கோவில எனக் கொண்டு திகழுவது எநநாடு எனறால அஃது தமிழ்நாடேயாகும். அதிலும் தஞ்சை மாவட்டமேயாகும. அம மாவட்டத்திலும சிறநது விளங்குவது தருமபுர ஆதீனம் எனில அது தமிழ்மாபு அறிந்த உண்மையாகும.

கடவுள்நெறிநின்று காரியமாற்றும் கயிலாயபரம்பரைத் தலைவ!

கோயில்கள் இருபத்தேழின் ஆதீனகர்த்தாக அமர்ந்து சிதைந்த பகுதிகளைச் செப்பமுறச் செய்தும், இன்னிசை தேவாரங்களை இசையுடன் வளர்த்தும், கோபுரம் புதுக்கிக் குடமுழுக்கு நடத்தியும், கடவுள் வரலாற்றைக் கனிவுடன் எழுதியும், ஒளியுடையரண்மனையாகவும், கலைக்கூடமாகவும், ஒவ்வொரு கோயில்களையும் ஆக்கிய பெருமை தங்களைத்தவிர வேறு யார்க்கும் அமையாது அரசர்குலத்தில்தோன்றி ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டையே அன்றாட வாழ்க்கையாகக் கொண்டு வாழ்ந்த மெய்ப்பொருள் நாயனாரும், மற்றும் பல அரசர்களும் தொண்டுகள் பல புரிந்து வாழ்ந்து வந்த இந்நாட்டில் துறவுநிலை நின்று அரசர்க்கு அரசரினும் மேலாக அருள் ஆட்சி புரியும் தங்கள் சீரிய நிலைகண்டு செப்பரிய மகிழ்ச்சியடைகிறோம்.

நல்வழிநின்று நாளும் அறம்வளர்க்கும் நல்லோய்!

சைவகுரவர் நால்வரில் முதல்வராம் திருஞானசம்பந்தர் கூன்பாண்டியன் கொண்ட வெப்பு நோய் நீக்கி அருள் புரிந்தது போலவும், அப்பரடிகள் மகேந்திரவர்மன் கடலில் கட்டியிட்ட கல்லையே தெப்பமெனக் கொண்டு கரை சேர்ந்து கடவுள் நெறி உணர்த்தியது போலவும், குந்தக் குடிசையினறிக் குவலயத்தில் வாடும் மக்கள் குழந்தை பெறும் நிலையிலாயினும் மகிழ்ச்சியுடன் இருந்து தாயும் சேயும் நலமுடன் மகிழ, மகப்பேறு மருத்துவச் சாலையை மாண்புடன் அமைத்து அருளியதை எண்ணுந்தோறும் சமயாசாரியர்கள் செய்து சென்ற தொண்டை, அவர்கட்கு வழி விளக்கமாகத் தாங்கள் செய்து வருகின்றீர்கள் என்பதற்கு இவை போன்ற பணிகளே சான்றாகும்.

காலநிலையுணர்ந்து கடவுள்நெறி வளர்க்கும் கனிவுடைக்குருவே!

இத்தமிழகம் கொண்டிருந்த மதங்கள் பலவற்றிலும் தனிச் சிறப்புடன் இன்று விளங்குவது சைவமதம் ஒன்றுதான் என்று சொன்னால் அது மிகையாகாது காலப்போக்கையுணர்ந்து கடவுட் கொள்கைக்கு மாறான நிலையிற் செல்லாமலும், மதக்கோட்பாட்டிற்கு மாறுபடாமலும், முன்னோர் சென்ற வழிக்கு முரணுபடாமலும், மக்களும் ஆண்டவன் பிள்ளைகள், மக்கட்குச் செய்யும்

தொண்டே ஆண்டவனுக்குச் செய்யும தொண்டாகும் என்ற முன்னோர் மொழியைப் பின்பற்றியும் சமயப்பணியும், பொதுப் பணியும் உடலும் உயிரும்போல ஒன்றிறகு ஒன்று இன்றியமையாதன என்பதை எண்ணியும், காசநோய், மருத்துவ நிதி. அகதிகள் நிவாரண நிதி முதலிய பல நற்காரியஙகளுககுப பெரும் பொருள் உதவியும், ஆதித திராவிடர்களுக்கு எண்ணெய் முழுக்கும் உணவும்அளித்தும் மேலும் உலகததோடு ஒட்ட ஒழுகும் செயல்களுமே சைவமத வளர்ச்சிககுப் பெரிதும் துணையாய் நிற்கின்றன என்பதை அறிநது தஙகளைப போற்றுகிறோம்.

சந்நிதானமாக எழுநதருளிய சிலஆண்டுகளிலே செயறகரிய செயல்களாம் ஆரம்பப்பாடசாலை, ஆகமப்பாடசாலை, தமிழ்க் கல்லூரி, வடமொழிககல்லூரி, சமயப்பிரசாரம், சம்பந்த வெளியீடு பண்ணிசை வளர்த்தல் பழநதமிழ் போற்றல முதலிய எண்ணிலாச் செயல்கள் இயற்றிய தாஙகள, தனியே வருகினறவர்கட்கு அருள் உபதேசம் வழங்குவதோடன்றிப் பொதுமக்களிடையேயும் எழுந்தருளி உபதேசம் செய்வது இதுவரை ஆதீன வரலாறறிற் காணாத அருட் செய்தியாக இருப்பதால் அச்சொலலுபதேசம் அனைவரையும் மகிழ்விக்கின்றது.

மெத்த நற்புகழ்பெறும சுத்தநல் வித்தக!

நமது நாட்டிற்கு இன்றியமையாத கல்விப்பணி, கடவுட்பணி முதலிய எலலாப்பணிகளையும் ஏற்ற காலத்தில் ஏற்ற வணணம் எல்லாம் நன்கு இயற்றத திருவுளங் கொண்டிருககிற ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின அருளாட்சி நீடு வாழ வேண்டும் என்றும், அவர்கள் திருவுள்ளக குறிபபுககளாகிய அருளறங்கள் அனைத்தும் இனிது நிறைவெயதவேண்டும என்றும எலலாம் வலல சொக்கலிங்கப்பெருமான் திருவடிகளைப் போற்றுகின்றோம்.

இங்ஙனம்,

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் மெய்யன்பர்கள்.

துறவறநெறிநிற்கும் தூயநற் பெரியீர்!

அன்புவழி நிற்கும் அறமன்றத் தலைவ! வருக! வருக! தங்கள் வருகையைக் கண்ட நாஙகள் மழையினைக் கண்ட பயிரினைப்

போலவும், உணவுகண்ட ஏழையைப் போலவும், தாயினைக் கண்ட சேயினைப்போலவும் எண்ணிலா இன்பத்தை அடைகிறோம். அவ்வின்பப்பெருக்கால வருக வருக எனறு வரவேற்கிறோம்.

மதத்துடன் கல்வியை வளாக்கும மாண்புறு நல்லீர்!

தாங்கள் ஆட்சிபீடம ஏறிய ஆறு ஆண்டுகட்குள் கோயில் புதுக்கியும, குளம் தொட்டும், கலலூரி கண்டும, சமயப்பிரசாரம் வளர்த்தும, மேலும எண்ணறற பணியாறறி வரும் தங்களைப் பாராட்டுவதோடு இனனும கலவிப்பணி பலபுரிநது இனிதுவாழ எல்லாம்வல்ல இறைவன அருள் புரிவாராக;

இங்ஙனம,
உயர்நிலைப்பளளி ஆசிரியர்களும், மாணவர்களும்.

இவ் வரவேற்புரைகளை எல்லாம் கருணையுடன் ஏற்றுககொணட ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசநநிதானம அவர்கள் அருளிய அன்புததும்பிய ஆசியுரை வருமாறு:—

அனபாகளே !

இன்று 'கண்டறியாதன கண்டேன்' என்ற ஒரு தொடர் என்னுடைய உள்ளததிலே எழுகின்றது. என்ன கண்டறியாதன கண்டேன்? யார் சொனனார்? இறைவன் அருள் நிரமபப்பெறற ஓர் ஆசிரியர். அவர் யார்? அப்பர் அடிகள். எங்கே கண்டறியாதன கணடேன என்றார்? ஐயாற்றிலே. கண்டேன் அவா திருப்பாதம கணடறியாதன கண்டேன் என்றார். நான் இங்கே என்னகண்டேன்? உங்களுடைய அன்பு வெள்ளத்தைக் கண்டேன். அனபும் அருளும் ஒன்றுசேர்ந்தது. அன்பும அருளும ஒனறுசேர்நதால என்ன நிகழும? ஒரே சப்தம்தான். இநதமாதிரி ஒரு நிகழ்ச்சி எங்கேயாவது நிகழ்நது இருக்கிறதா என்ற ஐயம எழலாம. நிகழ்ந்தும இருக்கிறது. எங்கு? இரணடு பெரியவர்கள சந்திப்பில். மாயூரம நகரவாசிகளாகிய நீங்களும தருமையாதீன ஒரு சநநிதானமவர்களும சேர்ந்திருககிறார்கள். இதுவும இறைவன் திருவருளே. அன்பையே குறிக்கோளாகக்கொணடு மக்களுக்குச செய்யும

தொண்டையே என்னுடைய வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டவர்களில் நானும ஒருவன் என்பதை உங்கள் முன்னிலையில நான சொலல விழைகினறேன காழியிலே அபபாடிகளும் ஞானசமபநதரும சேரநதார்கள். எபபடி? ஞானசபபந்தப் பெருமான் அடியார்கள் ஒருபதினாயிரம; அபபர் அடியார்கள் பதினெட்டாயிரம. இந்த இரணடு கூட்டமும் சேர்ந்தது. என்ன உண்டாயிற்று? ஒரே பெருஞ்சொல் சிவமதான். அரஹர முழக்கம உறசாகததோடு ஒலித்தது.

தோத்திரங்கள் பொது நூல்:

ஒரு பொது நூல தனிபபட்ட மததகிற்காகவோ அல்லது ஒரு தனிப்பட்ட இனத்திற்காகவோ இருக்குமானால அது ஒரு சிறந்த நூலாகாது மக்கள் வாழ்க்கைக்கு உறுதுணையாக எழுகினற நூல எதுவோ, மககளை நலல நெறியிலேவைககும் ஒருநூல் எதுவோ அந்தநூல்தான் பொதுநூல. அநதநூல்தான சைவ சமயத்தின் சிறநத நூல் என்பதை உங்களுக்கு அறிவிக்கின்றேன். ஏன? மதத்தின பொதுசசொதது அதறகாகததான் சொல்ல வந்தேனே தவிர, சைவசமயம சிறந்தது என்றோ மற்றசமயங்கள் தாழ்ந்தது என்று சொலலவோ - அறிவிக்கவோ நான் முன்வரவிலலை ஆகையால நான் சேக்கிழார சுவாமிகள் செய்யுளிலிருந்து ஒரு நிகழ்சசியைச சொலல விழைகினறேன இறைவன் ஆலகால விஷததை உணடார. தனககாக உணடாரா? உலகம எலலாம உய்யவேணடும என்றுதானே உணடார. தான் அநுபவிப்பதற்காக உணடாரல்லர் மேலேசொன்ன பெரியார்கள இருவரும சந்தித்த நிகழ்சசி பெரியபுராணத்தில் சொல்லியிருப்பதைப் பார்ப்போம

அருட்பெருகு தனிககடலும் உலகுககெல்லாம்
அன்புசெறி கடலுமாம எனவம ஓஙகும
பொருட்சமய முதற்சைவ நெறிதானபெறற
புணணியககண இரணடெனவும புவனம உய்ய
இருட்கடுவுண டவர அருளும உலகமெலாம
ஈன்றாள்தன திருவருளும எனவும் கூடித
தெருட்கலை ஞானககனறும அரசுமசென்று
செஞ்சடை வானவர்கோயில் சேரநதாரன்றே.

இவ்வாறு இருவரும் சேர்ந்தகாட்சி சித்திரிக்கப்பட்டிருக்
கிறது அந்த முறையிலே இந்த நகராண்மைக் கழகத்தாராகிய
உங்களுடைய ஒரு அன்பு, எங்கள் குருஞானசம்பந்த பெருமா
னின் அருள் இரண்டும் சேர்ந்து இங்கே என்னை வரச்
செய்திருக்கிறது இந்த இரண்டும் சேரவில்லையானால் நானும்
வரப்போவதில்லை. நீங்களும் இவ்வளவு கூட்டமாக இங்கே
இருந்திருக்கவேண்டிய சந்தர்ப்பம் நேர்ந்திராது. மேற்கூறிய
அவர்கள் இரண்டுபேரும் ஆலயத்துக்குச் சென்றார்கள். நாம்
இங்கே நகராண்மைப்பள்ளியில் கூடியிருக்கிறோம். ஏன் என்றால்
இறைவனையடைய முதல் தமிழ் மகனார் "கற்றதனாலாய பயனென்ன
கொல் வாலறிவன் நற்றாள் தொழாரெனின்" என்று அதைக்கூறி
இருக்கிறார்.

இந்தப்பள்ளிக்கு நாம் முதன்முதலில் விஜயம் செய்யும்
பொழுது ஏன் இவ்வளவுகூட்டம் கூடியிருக்கிறீர்கள்? எல்லாம்
உங்களுடைய பெரும் அன்புதானே நாம் எல்லாம் என்னசெய்ய
வேண்டும் என்றால், நம்முடைய கடமையை நாம் செம்மையாகச்
செய்யவேண்டும். ஆதீனந்தான் சமயத்தை வளர்க்கவேண்டும்
என்று சொன்னார்கள் சேரமான் என்று ஒரு அரசர் இருந்தார்.
சேரமான் சிவபூஜையில் சிறந்தவர். ஒரு சந்நிதானம் இல்லை
அன்பர்களே! ஓர் அரசர். இதை ஞாபகப்படுத்தத்தான் சொல்ல
வந்தேன். நன்றாக ஸ்நானம்செய்தார் திருநீற்றை ஆநந்தமாக
அணிந்தார் யார்? ஒரு சக்கரவர்த்தி. ஓர் அரசர். சிவபூஜை
செய்தார். பூஜையின் முடிவிலே ஓர் ஓசை கேட்கும் அதைக்
கேட்டால்தான் பூஜை நல்லமுறையிலே செய்தோம் இறைவனின்
திருவருள் பெற்றோம் என்று ஒரு குறிக்கோள் இருந்தது. ஆனால்
தினந்தோறும் ஓசைகேட்டுவந்த அந்தச் சேரமானுக்கு ஒருநாள்
ஓசைகேட்கவில்லை என்னசெய்தார்? இதை அழகாகச்சேக்கிழார்
சொல்லுகிறார். உலகியலும் அரசியலும் உறுதி அல்ல என
உணர்வார் என்று. அத்தகைய அவருக்கு ஒருநாள் ஓசை கேட்க
வில்லை. ஏன்?

சிதம்பரத்திலே ஒரு அடியார். அந்த அடியார்தான் சுந்தர
மூர்த்தி நாயனார். அவர் ஆநந்தமாக அங்கே சிவபெருமானை

வழிபட்டுப் பாடிக்கொண்டிருந்தார். சிவபெருமான் அதைக் கேட்டுத் தங்கிவிட்டார். ஏன் தங்கிவிட்டார்? இப்பொழுது நாம ஒருவரை ஒருவா அறிமுகபபடுத்துகிறோம அலலவா? இறைவனும அதைசசெய்தாா. எப்படி? சேரமான் நான் குற்றம செய்யவில்லையே இன்று ஏன் ஓசை கேட்கவிலலை? இது என்ன என எண்ணி உடைவாளை உருவி மாரபில் நாட்டிக்கொள்ள முற்பட்டார் உடனே ஓசைகேடடது. ஏன் இன்று ஓசைகேட்கக் காலதாமதம? எனனுடைய பூஜையில ஏதேனும தவறு ஏற்பட்டதா என்று கேடடான மனனன். பதில்வநதது. என்ன பதில் வந்தது? சிதமபரததிலே சுநதரமூாத்திநாயனாரும பதிகம பாடினார். அதைக்கேட்டு அங்கே காலம தாழ்ததிவிட்டோம. என்று சிவபெருமான சொனனார். இந்தமுறையிலே சுந்தர மூர்த்தி நாயனாரைச் சேரமானுக்கு அறிமுகபபடுத்துகின்றார் சிவபெருமான். நாமதான் சிவபூஜையில் சிறந்தவர் என்று இருந்தோம. ஆனால் ஆண்டவனாலேயே சுந்தரமூர்தறி நாயனார் அறிமுகப்படுத்தப்படுகினறார். ஆகையால் அவர் நமமைவிட பக்தி உள்ளவராக இருககவேணடும. அநத அடியாரை நாம் தரிசிக்கவேணடும என்றுவநதாா. 'இநததொடர்பு சிவபெருமா னால் ஏற்படுத்தப்பட்ட பிறகு இறைவனின அநுககிரகத்தினால் சேரமான் சுந்தரமூர்த்திநாயனாரைப பாாகக அங்கே சென்றார். கண்டார்; உடனிருநதாா; பினனொருகாலததில் அநத அடியா ரைத் தன்னாட்டிற்கு அழைத்துசசெனறாா ஒருநாள் அடியாரைக் காணவிலலை. அடியார் வெளளையானைமேல ஆகாயததில் போய்க் கொண்டிருககிறார். இதைக்கண்டார் அபமன்னர் இறைவன் அடியாருக்கு மாததிரம அநுக்கிரகம செய்துவிட்டார் நமக்கு அநுக்கிரகம செய்யவில்லையே என்று நினைத்தார் பககத்திலே நினறிருந்தது ஒரு குதிரை. குதிரையை இழுதது என்ன செய்தார்? ஒரு சொலலாகிய- மநதிரத்தைச சொன்னார். அந்த மந்திரமோ பஞ்சாக்ஷரம. உடனே குதிரையும கிளமபிற்று. சேரமான் குதிரை இருககிறதே அது வெளளையானைக்கு முன் னாலே போய் நின்றது பஞசாக்ஷரத்தின உணமையான தத்து வம எவ்வளவு சிறநதது. இதை ஏன சொல்லுகிறேன் என்றால் சமயம, அரசியல், மக்களின் வாழ்க்கைத் தத்துவம எல்லாம் இருக்கிறது என்று அறிவிப்பதற்காகவேதான்.

சுந்தரர் கயிலையை அடைந்தார். சேரமானும் அங்கே சென்றார். அங்கே அடியவர் பேரின்பத்தைக் கண்டார். அந்த பேரின்பத்தைக்கண்ட வுடனே அரசன் நினைவும் அடியார்க்கு வந்தது சுந்தரபெருமான சேரமான் வந்திருப்பதை கயிலை நாதனிடம தெரிவித்துககொண்டார். நாம் அழையாமல் அல்லவா இங்கே வந்தார் என்று சிவபெருமான் கேட்டார். அடியே னுக்கு முன்பு அவரும வந்திருக்கிறார் என்று தெரிவித்துக் கொண்டார். சரி அழைத்துவா என்று அழைப்பு வந்தது. அந்தநிலையிலே இங்கே நாம உங்களுடைய அன்புவெள்ளமும ஆண்டவனுடைய கருணைவெள்ளமும கலநது உந்த வநதோம.

சேரமானுக்கு ஒரு நல்லோா இணக்கம எவ்வளவு உயர்நத நிலையைக் கொடுததுவிட்டது. ஔவைப்பாட்டி சொல்லியிருக் கின்றார. "நல்லாரைக காணபதும நன்றே, நலமிகக நல்லார் சொல் கேட்பதுவும நன்றே நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே, நல்லாரோடு இணங்கி இருபபதுவும நன்று" அந்தச செய்யுளின் கருததை அழகாகச் சொல்லுகிறார். அந்த இறைவன் தொடாபினாலே ஒரு நல்லவரை நட்புக்கொள்ளு கிறார சேரமான் பெருமாள். சுந்தரமூர்த்தி நாயனாரைப் பற்றிச சென்றார். இறைவனை அடைநதார் அந்தமுறையிலே மடாலயம வேறு, பொதுமக்கள வேறு அல்ல. ஒரே ஒரு விததியாசம உங்களுக்கும எனககும என்ன? நீங்கள் இல்லறத் தார். நான் துறவி எனனுடைய கடமையைத்தான் செய்கிறேன்.

இப்பொழுது இங்கு இசை நடக்கஇருக்கிறது. இசைக் கலையை வீணாக்கிககொளளககூடாது. ஒருசொல்லைச சொல்லி நிறுததிவிடுகிறேன். ஒன்றை விருமபிசசொல்லவேண்டும என்று தூண்டுகிறது. அதனால சொலலுகின்றேன். மாணிக்கவாசக சுவாமிகள் சொலலுகிறார் நமமுடைய உயிர் இருக்கிறதே அது எந்த நிறம் கருப்பா? சிகப்பா? யாருக்கும தெரியாதலலவா. ஆனால் உடலில் உயிா இருக்கிறது என்பதை மாத்திரம அறிகி றோம. காற்று இருககிறது. அதைப் பாாத்தவர் யாரும் இலலை இருககிறது என்று எப்படி சொல்லுகிறோம? யாராவது காற்றைக் கணணால் கணடதுணடா? அநுமானத்தைக்கொண்டு

தானே சொல்லுகின்றோம். அந்தமுறையிலே உள்ளே ஒரு பொருள் இருக்கிறது ஒரு வண்டைப்பார்த்துச் சொல்லுகிறார். என்ன சொல்கிறார்? வண்டே! ஒருபூவில் இருக்கும் சிறு அளவுள்ள இந்தத் தேனை உண்ணுகிறாய் இது உனக்குப் போதவில்லை. மற்றொருபூவுக்குத் தாவிச் செல்லுகிறாய். இந்த நிலைவேண்டாம். பூவுக்குப் பூ தாவாமல் தேனை உண்ண வேண்டும். வேளை தவறாமல் உண்ணவேண்டும். அதற்கு நீ செய்யவேண்டியது என்ன? நீ ஒரு இடத்திலே இருந்து கொண்டு ஆண்டவனைத் தியானம்செய். இதை இப்பொழுது விஞ்ஞான ஆராய்ச்சிக்காரர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இது எல்லாம் நம்முடைய பழங்காலத்திலுடைய பழமையான தத்துவங்கள். இந்நிலையில் வண்டைப்பார்த்துச் சொல்லுகிறார்.

''தினைத்தனை உள்ளதோர் பூவினுள் தேனுண்ணாதே
நினைதொறும் காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத்தேன் சொரியும்
குனிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.''

நினைக்குந்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்பொழுதும் நாம் மூன்றுகாலம், ஆறுகாலம் என்று உண்ணுகிறோமே அந்தமாதிரி அல்ல எப்பொழுதும், அனைத்து எலும்புஉள்நெக ஆனந்தத்தேன் சொரியும் என்கிறார் வண்டைப் பார்த்துச் சொல்லுகிறார் என்றால், வண்டைப்போல் இருக்கும் நம்மைப் பார்த்துத்தான் சொல்லுகிறார். அப்படி என்னசெய்யவேண்டும்? அந்தநிலையில் நாம் நினைக்கலாம். அப்படிப்பட்ட முறைகளிலே ஒன்றுதான் ஆலயத்திற்குப்போய் தரிசனம்செய்வது. அது ஒரு முறை நம்முடைய நினைப்பு இருக்கிறதே, இந்த உள்ளமே கோயில். மனம் அடிமை அந்தமுறையில் நாம் எல்லாம் நம்முடைய கடமையை உணர்ந்து செய்யவேண்டும். எப்பொழுதும் நாம் அப்படிச் செய்வோமேயானால் எல்லாம் வரும். நல்லன யாவும் வரும். பாருங்கள்!

இப்பொழுது ஒன்று ஞாபகத்திற்கு வந்துவிட்டது நாம் ஒன்றும் பெறவிட்டால் என்ன இருக்கிறது? அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை. பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை.

பொருள் பெறும் வழி என்ன? பராசக்தியை வழிபடுதலே! வழிபட்டால் என்ன தருவாள்? தனம் தரும். பொருள் இருந்தால் போதுமா? அறிவோடு அதனைப் போற்றவேண்டாமா? அதற்காகக் கல்வி தரும். அது போதுமா? அதோடு மனது கோழையாக இருந்தால் பயன்படுமா? ஒருநாளும் தளர்வறியா மனம் தரும். இவைகள் எல்லாம் இருந்தாலும் ஒரு நல்ல தோற்றம் வேண்டாமா? தெய்வவடிவும் தரும் இவ்வளவுமிருந்தும் நெஞ்சில் வஞ்சமுள்ள நட்பு இருந்து பயன் என்ன? ஆகையால் நெஞ்சில் வஞ்சமில்லா இனம் தரும் இப்படியே ஒன்றொன்றாகச் சொல்வானேன் நல்லன எல்லாம் தரும். இவ்வளவும் யாருக்குத் தரும்? அன்பர் என்பவர்க்கே தரும் இந்தப்பெருமை எல்லாம் தரும். எது? அபிராமி கடைக்கண்களே. அந்தப் பாட்டைப் பாருங்கள்:-

தனந்தரும் கல்விதரும் ஒருநாளுந் தளர்வறியா
மனந்தரும் தெய்வவடிவுந் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லனவெல்லாந்தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே

அன்பர்களே! இந்த மாயூரத்திற்கு நாம் வந்ததும் ஒரு பெரியவர் ஞாபகம் வருகிறது அதைச் சொல்லி நிறுத்தி விடுகிறேன். வேதநாயகம்பிள்ளை என்று ஒருபெரியவர் இருந்தார். அவர் ஒரு கலைவல்லுநர். அவருடைய கீர்த்தனங்களைப் பாடாத மக்கள் தமிழ் நாட்டிலே கிடையாது. இவருடைய ஆசிரியர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை என்ற இன்னொருபெரியவர் இருந்தார். அவர் காழிக்கோவை என்று ஒரு நூல் செய்தார். அந்த நூலுக்குச் சாற்றுக்கவி கொடுத்தார் அப்பொழுது மாயூரம் சீகாழிப்பகுதியில் முனிசீபாக இருந்த வேதநாயகம் பிள்ளை. அந்தச் செய்யுளை நாம் பார்க்கவேண்டும். அதிலே அவர் பெருமானை நோக்கிச் சொல்லுகிறார் இந்த மீனாட்சி சுந்தரம் பிள்ளை இருக்கிறார்களே அவர் கோவையைப்போல நீங்கள் பெற்று இருப்பீர்களா? பார்த்து இருப்பீர்களா? உண்மையைச் சொல்லும்; நாம் யார் தெரியுமா? நாம் இந்தக் காழிவரைப்பின் நீதிபதி என்று அறிவீர் என்கிறார். எந்த உதவியோகத்திலிருந்தாலும் இறைவனை மறந்தாரா? மறக்கவேயில்லை.

அந்த முறையிலே இந்த வரவேற்பு இருக்கிறதே சந்நிதானத்திற்கு எவ்வளவோ வரவேற்புகள் நடந்திருக்கலாம். ஆனால் மாயூரத்தின் வரவேற்பு மாதிரி சந்நிதானம் அடைந்திருக்கிறீர்களா? உண்மையைச் சொல்லுங்கள் என்ற முறையிலே இது இருக்கிறது. அதற்காகச் சொல்லுகிறேன்.

விதியெதிரி லரிமுதலோர் புகழ்புகலியீசரே விண்ணோர் மண்ணோர்
துதிபொதிபல் பாமாலை பெற்றிருப்பீர் மீனாட்சி சுந்தரப்பேர்
மதிமுதியன் கோவையைப்போல் பெற்றீரோ கொல் இககாழி வரைப்பில்நீதி
யதிபதிரா மெனவறிவீர் நம்முன்னஞ் சந்திபமா அறைகுவீரே.

அன்பர்களே! ஒரு பெரிய சமுத்திரம். அதுதான் அன்பு சமுத்திரம். அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாழ்? உங்களுடைய நிலையிலே நானுமவந்துவிட்டேன்.

கவிகள் உலகநிலையில்வைத்தே எல்லாவற்றையும்சொல்லுவார்கள்

கம்பசித்திரம் என்று சொல்கிறார்களல்லவா? கம்ப ராமாயணத்தை நாம் படிக்கவேண்டியது அவசியம்தான் சிறந்த கருத்துள்ளதுதான் என்ற எண்ணம் உள்ளத்திலே எழவேண்டும். உலகியல் சொல்லை எல்லாம் எடுத்தாளுகின்றான் கம்பன். கவிஞர்கள் எல்லாம் உதட்டிற்கு ஒப்பாக எடுத்தாளுகிற சொல்லானது கொவ்வைக்கனி அதிலே கோடு வெள்ளை படர்ந்திருக்கும். ஆதலின் கம்பர் எதனை எடுத்தாளுகிறார் பாருங்கள். தூதுளங் கனியை வென்ற துவர்த்தவாய் எனகிறார்.

இழவு என்ற ஒரு சொல். இந்த இழவு என்ற சொல்லைக் கம்பன் எப்படி எடுத்தாளுகிறான்.

கனியாவுள்ளத் தண்ணன்மனத்திற கதமூழ்க
விளியாகின்றே நீதிநலத்தின் விளைவோராவான்
அனியா லிவ்வூர் காணாலத்தின் னைகினரேன்
எளியேனுறாலயாவதுனக்கிங்கு இழவென்றான்.

ஒரு பொருளைக் கண்டான் மாருதி. அந்தப்பொருள் யார்? எட்டுத்தோளும் நான்கு முகமும் உடையது. பெருந்தீ போன்ற

நிறம். சுழலுகின்ற கண்கள். மூன்று உலகத்தையும் வேரோடு பிடுங்கி எறியக்கூடிய பலம் எல்லாம் அமைந்த ஒரு பெண் உருவம். அது சும்மாவா இருந்தது? மாருதி மதிலைத் தாண்டுகிறபொழுது மலைகளை எல்லாம் பிடுங்கி அடித்தது. அப்பொழுது மாருதி பார்த்தான். எட்டுக்கையையும் தன்னுடைய ஒருகையால் எட்டிப்பிடித்தான். இவள் பெண் அல்லவா இவளைக் கொல்வது பாவம் என்று நெஞ்சத்தில் ஒருஅடி கொடுத்தான். அவள் இடியுண்ட பாம்பைப் போலக் குற்றுயிராய் விழுந்தாள். இதைக் கம்பர் காட்டுகிறார் பாருங்கள்.

அடியாமுன்ன மங்கையினைத் தொருகையால்
பிடியாவென்னே பெண்ணிவள் கொலவிற் பிழையென்(று)
ஒடியாநெஞ்சத் தோரடிகொண்டா னுயிரோடும்
இடியேறுண்ட நாகமெனப்பா ரிடைவீழ்ந்தாள்.

பிர்மாவினுடைய ஆக்ஞையினாலே இந்த நிலைக்கு வந்தேன். அவனுடைய அருளாலே இத்தனைகாலம் இந்த இலங்கையைக் காவல் செய்து விட்டேன். என்னுடைய பெயர் இலங்கை மாதேவி. பிரமா அன்று கூறினார். குரங்கின் கையால் நீ அறையப்படுவாயாயின் அன்றே நீயும் அழிவாய். இலங்கைக்கும் அழிவுவரும் என்று. இந்த இரகசியங்களை எல்லாம் சொன்னாள். அநுமார் நான்காவது உபாயத்தின்படி இலங்கையை அடைய வழி கிடைத்தது.

மற்றொரு நிகழ்ச்சி பாருங்கள். வாலியைக் கொன்று சுக்ரீவனுக்கு ஆட்சியை வாங்கிக்கொடுத்தார் இராமர். கார் காலம் வரட்டும் மீண்டும் போரைத் தொடங்குவோம் என்று சொல்லி விட்டான் சுக்ரீவன். கார்காலம்வந்தது. இராமர் கார்காலம் போகட்டும் என்று சொல்லிக்கொண்டிருந்தார், இலக்குவன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். இராமன் ஆணையின் வண்ணம் சுக்ரீவனைத் தேடிக்கொண்டு நேராகப் போனார். அந்தச் சமயத்திலே சுக்ரீவன் ஆட்சியிலுள்ள குரங்குகள் எல்லாம் பார்த்தன, நம்முடைய அரசன் சுக்ரீவன் மது உண்டு மயக்கத்தில் கிடக்கிறான் நிகழ்ச்சி என்னவாகுமோ என நினைத்ததாம். தாரையிடம் சென்று அநுமார் விண்ணப்

பித்தங்கொண்டார். தாரையும் நிலையை உணர்ந்து மகளிர் கூட்டம் புடைசூழ இலக்குவன் வரும் வழியை நோக்கிப் புறப் பட்டாள் இலக்குவனும் கடுங்கோபத்துடனவ்ருகிறான் இலக்கு வனை குரங்குகளுமபலுக்கு ஒன்றுமதெரியாது என்ற எண்ணத் திலிருந்தான். ஆனால், அந்தக குரங்குக்குமபலிலே இனிய கானம் ஒன்று வருவதைககேட்டான் பொருளோ ஆழமாகஇருக்கிறது. அப்பொழுது இராமனை விட்டுப் பிரியாத நீ இப்பொழுது தனியாக வரக்காரணம என்ன? என்று தன்னுடைய கணவனாகிய வாலியை இழந்த துயரத்திலாழ்ந்திருக்கும தாரை கேட்டாள். தாரையைப பார்த்ததும தனனுடைய தந்தையாகிய தசரத சக்கரவர்த்தியை இழந்த தன்னுடைய தாயின் ஞாபகமவந்ததாம் இலக்குவனுககு. இதை எவ்வளவு அழகாகச் சொல்லுகிறார்.

ஆரொகொலோ வுரைசெய்தாரென் றருள்வரச் சீற்றம்அஃகப்
பாரகுலா முழுவெண் திஙகள் பகலவந்த படிவமபோலும்
ஏர்குலா முகத்தினாளை யிறைமுக மெடுத்து நோக்கித
தார்குலா மலஙகல மாாபன் தாயரை நினைந்து நைந்தான்.

இதுதான் கம்பனுடைய கவி.

மற்றொரு முறை இலக்குவன் இராமன் முன்பு சினம் கொண் டான இராமன காட்டுக்குப்போனது கைகேசியின் குற்றமல்ல தசரதன் குற்றமுமல்ல ஆற்றிலே தணணீர் வரவிலலையானல் அது யார் குறறம! ஆற்றின குற்றமா? தணணீரின் குற்றமா? மழையின் குறறமா? அதுபோல இராமர் காடடுக்குச்சென்றது விதியின் குற்றமே தவிர மற்று எவர் குற்றமுமனறு. இதனைக் கம்பர் இராமர் கூற்றாகக் கூறுகின்றார்.

நதியின் பிழையன்று நறும்புனலின்மை யற்றே
பதியின் பிழையன்று பயநது நமைபபுரநதாள்
மதியின பிழையன்று மகன்பிழையனறு மைந்த
விதியின்பிழை நீ இதறகென்னை வெகுணடதென்றான்.

இதுதான் கம்பன் கவிசசித்திரம். கடுமசீற்றம கொண்டிருக்கிறான் இலக்குவன். இதற்குச சமாதானம சொலகிறார் இராமபிரான்.

என்னை அன்போடு தூக்கி வளர்த்து இந்த நிலைக்குக் கொண்டு வந்த என் அப்பாவிற்கு மாறுபட்ட எண்ணத்துடன் அரசாட்சி ஏற்றால் நன்றாக இருக்குமா தம்பி இலக்குமணா நான் சொல்லுவதை நீ கேட்பதால் என்ன குற்றம் இருக்கிறது இதை எவ்வளவு அழகாக விளக்குகின்றார் கம்பர்.

நன்சொற்கடந்தாண்டெனை நாளும்வளர்த்த தாதை
தன்சொற்கடந்தாற்கு அரசாள்வது தக்கதென்றால்
என்சொற்கடந்தால் உனக்கு யாதுளது ஊனம்என்றான்
தென்சொற்கடந்தான் வடசொற்கலைக் கெல்லைதேர்ந்தான்.

இதுதான் கம்பன் கவிசசித்திரம். இதை எதற்காச் சொல்லுகிறேன். மொழிப் பாகுபாடு நமக்குக் கூடாது என்பதையும், மொழிகளுக்குள் ஏற்றத்தாழ்வு இல்லை என்பதையும் கம்பர் காட்டுகிறார். கம்பர் வடமொழி, தென்மொழி என்ற பாகுபாடுகளைக் காண்பிக்காமல் இரண்டையும் சமநோக்குடன் கொண்டு செல்கிறார் என்பதற்காகத்தான் இதைக்கூறினேன்.

இந்தக்காலத்தில் வடமொழி வேறு தமிழ் வேறு என்ற குரல் எழுகிறது. இரண்டும் ஒன்றே. ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய் என்ற கருத்து இராமாயணத்தில் இருக்கிறது. "வடமொழியும் தென்றமிழும் மறைகளனைத்தும்" என அப்பரடிகளும் அறிவிக்கின்றார்கள் எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு என்றபடி எதில் எதில் உண்மை இருக்கிறதோ அதைத்தான் நாம் எடுத்துக்கொள்ளவேண்டும். இப்பொழுது இங்கே ஒருவர் இசை பாடப்போகிறார். அந்த முறையிலே செந்தமிழ்ச் சொக்கர் திருவருளைப்பெற்று மழை வளம் மிகுந்து பயிர் செழித்து உணவுப்பஞ்சமில்லாமல் இருக்கவேண்டும். எல்லா உயிர்க்கும் மழைதான் காரணம் மழை. எவ்வளவு பெருமையுடையது என்பதை ஒரு தமிழ்ப்பெரியார் சொல்லுகிறார் பாருங்கள். துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை உலகம் எந்த முறையிலே இருக்கவேண்டும் என்பதற்கு ஓர் வாழ்த்துச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்,

இதனை அடுத்து கானகலாதர மதுரை மணிஐயர் அவர்களின் இன்னிசை அரங்கு தக்கபக்கவாத்தியங்களுடன் நிகழ்ந்தது. முடிவில் மகாசந்நிதானமவர்கள் இன்னிசையைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்தி ஆசிவழங்கினார்கள். மாயூரம் திரு கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மிகச்சிறியமுறையில் நன்றிகூற விழா இனிது முடிந்தது. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் முன் போலவே வெள்ளிப்பல்லக்கில் எழுந்தருளினார்கள். மேளவாத்தியத்துடன் அங்கிருந்து வலமாக மாதானத் தெருவழியாக ஆதீனத்திற்கு எழுந்தருளியானார்கள். பெருமக்களும் கூடவே மடாலயம் வரையிலும் வந்து விடைபெற்றுச் சென்றார்கள் மணியும் இரண்டு ஆயிற்று.

கண்டதும் கேட்டதும்

Sri P. S. PILLAY, M A, Editor, 'The Power'

அதிர்ஷ்டம் என்பது ஒரு நகருக்கும் உண்டு. புண்ணிய நதியாகிய காவேரிக் கரையிலே உள்ள மாயூரம் நகருக்கு அதிர்ஷ்டம் பிறந்தது எப்படி? தருமபுர ஆதீனம் மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளால பல அரிய பணிகளில் ஒன்றாகிய மருத்துவ விடுதி மாயூரத்தின் மத்தியில் கட்டப்பட்டு எல்லாவித வசதிகளும் பெற்று பொது மக்களுக்கு சேவை புரிந்துவருவது தான்.

"பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த மக்கட்பேறல்ல பிற" என்றார் திருவள்ளுவர். உலகிலே ஜனத்தொகை கணக்கைச் சோதனை செய்தால் சற்றேறக்குறைய ஆணும், பெண்ணும் எண்ணிக்கையில் சமமாக இருக்கக்கூடும். அப்படியிருக்க ஆண்மக்களால் பெண்மக்களுக்கு உண்டாகும் சிசுக்களை கஷ்டமின்றிப் பெற்று அம்மக்கள் உடல்வலிபெற்று, அதன் வழியே நாட்டுநலனும், சமூகநலனும் வளரச் செய்வார் சிலரே. அதிலும் மதஸ்தாபனங்களின் கர்த்தாக்களில் இவ்வித கைங்கரியங்களில் ஈடுபடுபவர் மிகவும் சிலரே.

பிரான்சு தேசத்தில் கிளெய்ராக் என்ற கிராமத்தில், காந்தசக்தியால் Magnetism கைக்குட்டை ஒன்று ஒரு கர்ப்பஸ்திரீ வயிற்றில் போடப்பட்டு, சுகமாகப் பிரசவம் ஆயிற்று என்ற செய்தியைப் படித்தேன். அப்படியிருந்தால் விஷயம் சுருக்கமாக இருக்கிறதே! ஆனால் அது கட்டுக்கதையோ என்ற எண்ணம் உதித்தது. எப்படியிருந்தாலும் அது சாமானியமாக எங்கும் நடைபெறாது என்றே சொல்லவேண்டும். நம் நாட்டில் 2000 வருஷங்களுக்கு முன்பே தற்கால வைத்திய சிகிச்சைகள் இருந்து வந்தனவாம். அவ்வித சிகிச்சைகள் நோயாளிகளுக்குக் கஷ்டம் தராமல் இல்லையாம். விஞ்ஞான சாஸ்திரத்தை ஒட்டி, தற்காலம் பிரசவசம்பந்தமான சிகிச்சைகளும், அதற்கு வேண்டிய சாதனங்களும் அதிகமாக வளர்ந்து விட்டன. வெகுவாக நல்ல முறையில் கஷ்டப்பட்டு, ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக சுவாமிகள் இலவச மருத்துவ நிலையம் எனப்பெயர்வைத்து, தற்கால உபகரணங்களையும் வாங்கி வழங்கிவரும் மாயூர மருத்துவ விடுதி சமீப காலத்தில் சென்னை முதல் அமைச்சரால் திறக்கப்பட்டது.

இவ்விடுதி திறப்புவிழாவிலே ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் கலந்துகொண்டார்கள். ஒரு மேடையிலே அரசியல் தலைவரும், சமயத் தலைவரும் கூடிக் கலந்துகொள்வது என்றால் அது நாட்டின் உயர்வைக

காட்டுகிறதல்லவா? மகாசந்நிதானம் அவர்கள் அருளிய பொன்னுரைகள் பெருமக்கள் மனதைக்கவர்ந்தன. அழமாயும் அகலமாயும் உள்ள சொற்கள் நம் நாட்டிலே பனிரண்டாம் நூற்றூண்டில்கூட சேக்கிழார் முதல் அமைச்சராக விளங்கவில்லையா? அவர் ஆக்கித் தந்த பெரிய புராணம் ஞானப் பொக்கிஷம் அல்லவா? இன்னும் தேன் என்று வழங்கிவரும் திருவாசகம் நூல் இயற்றிய மாணிக்கவாசக சுவாமிகளும் ஒரு முதல் அமைச்சர் தானே? இவ்விதம் நம் நாட்டில் பழைய காலந்தொட்டு அரசியல் தலைவர்களே மதத்தொண்டு செய்து வந்தார்கள். அப்படியிருக்கத் தற்காலத்தில் அரசியல் வேறு, மதங்கள் வேறு என்ற வேற்றுமை உண்டாவதற்குக் காரணம் என்னே? அரசன் மேல், ஆண்டி கீழ் என்றால், "நாமார்க்கும் குடியல்லோம்" என்ற அப்பர் சுதந்திர மொழி தோன்ற வில்லையா? மதங்களையும், சம்பிரதாயங்களையும் அடிப்படையாகக்கொண்டு நடத்தி வரும் அரசாங்கங்கள்தான் நீடூழிகாலம் சிறப்புற்ற முறையிலே நடந்துவருகின்றன. இதற்குச் சரித்திர ஆதாரங்கள் பல.

"தொட்டிலிலும், கட்டிலிலும்" என்ற உணர்ச்சி உடைய தாய்மார்கள் நல்ல பிள்ளைகளை ஈன்று நாடு செழிடபுறம் வண்ணம், இந்த மருத்துவ விடுதி தந்த மகாசந்நிதானம் அவர்களைப் போற்றுதற்குரியதாகும். இப்படடுமா? எல்லா வகையிலும் இதுபோன்ற பயன் பெறும் வண்ணம் ஏனைய பணிகளும் என்றும் நடைபெறுகின்றன. சமய மணமும், தமிழ்மணமும் நிரம்பி ஆதீன நிர்வாகத்தைப் பலவழிகளிலும் சிறப்புற நடத்தி வரும் பெருங்குணம் படைத்த ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் திருவருளால், தெய்வ பக்தியும், நிறைந்த செல்வமும் மக்களிடத்தே பெருகும்படி ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் திருவருள் செய்வாராக.

கு-ரை: கொய் உளை குந்தம் - கொய்தபுறமயிரையுடைய குதிரைகள்; கோல் - குதிரையோட்டுங்கோல்; வையம் - தேர்; வலவர் - சாரதிகள்; எய் உற்ற - அம்பு எய்த; இருமுண்டம் கசம் - பெரிய தலைகளிலுள்ள மயிரை; மை - கருநிறம்; கந்தரம் - கழுத்து மடித்தாள் - கொன்றாள்; சிலர் - சில்லோர்; என்றது அசுரவீரர்களை. 6

சிலர்தமை யடியாற் கொன்றாள் சிலர்தமை யுரத்தாற் கொன்றாள், பலமுடை யவுணர் விட்ட படைசரம் விழுங்கிச் சேனை, யுலைவுற மர்த்த னஞ்செய் தடியினாற் சிலரை யோட்டிச், சிலர்தமை நாட்டத் தாலுஞ் செற்றனள் காளி மன்னோ.

கு-ரை: அடியால் - காலால் உதைத்து; உரத்தால் - மார்பினால் நசுக்கி; படை - வேல் வாள் முதலிய படைக்கலங்கள்; சரம் - பாணம்; மர்த்தனம்செய்து - (காலால்) நசுக்கியும்; அடியால் - அடித்தலினால்; ஓட்டி - கொன்று, துரத்தியெனினுமாம்; நாட்டத்தால் - வாளால்; செற்றனள் - கொன்றாள். 7

கட்டங்கத் தடியாற் சில்லோர் கெட்டங்க முடையக் கன்னி, துட்டரா மசுரர் சேனை தொலைத்தல்கண் டடியே றென்ன, வட்டகா சத்தனுகிச் சண்டனு மவுணன் மேவி, வட்டமாய்த் தவர்வ ணக்கி வாளிமா மழைபொழிந்தான்.

கு-ரை: கட்டங்கத்து-குண்டுத்தடியால்; அடியால்-அடித்தலால்; அங்கம் கெட்டு உடைய - உடல் சிதைந்து அழியவும்; அட்டகாசத்தன் - பெருங்கருச்சனையுடையவன்; தவர் வணக்கி - வில்லை வளைத்து; வாளி - அம்பு. 8

தோணியா லனையன் மூடச் சுடருறு பரிதி தன்னை, லேனுள முண்டன் மூட விறைவியும் விழுங்கி நின்றாள், மானுறு கமலத் தோழன் விசயங்கண் டாக்கொண் டுற்ற, சேனுறு சலத ரத்தில் சேர்ந்துடன் மறைந்த வாபோல்.

கு - ரை தோணி - அம்புகள்; அனையன - சண்டன; மூட- தேவியை மறைக்கவும்; பரிதி தனறல் - சக்கரப் படையால்; இறைவி - காளியானவள்; விழுங்கி - அச்சக்கரப்படைகளை வாயி னல் விழுங்கி; கமலத்தோழன் - சூரியனுடைய; விசயங்கள் - மண்டலங்கள்; மா - பெருமை: கருநிறம் எனினுமாம்; சலதரம் - மேகம்; மறைந்தஆபோல் - மறைந்தவிதம்போல.

வி - ரை: மறைந்தவாபோல் விழுங்கி நின்றாள் எனக் கூட்டுக சூரியபிம்பங்கள் மேகத்தில் சேர்ந்து மறைவதுபோல முண்டன்விட்ட சக்கரங்கள் காளியின்வாயில் சேர்ந்து விழுங்கப் பட்டு மறைந்தன. 9

பின்பமை யாசஞ் செய்து பேரர வத்தி னேடுந்
தன்பலி னொளிவி ளங்க நாந்தகம் விதிர்த்தம் மென்றே
முன்புபோய்ச்சண்டன் கேசம் பற்றியேமுண்டந் தன்னை
வன்படை நவிராற் காதி வானுளோர் துதிக்க நின்றாள்.

கு - ரை: அம்மை - காளி; அரவம் - கருச்சனை, தன்பலின் ஒலிவிளங்க ஆசம்செய்து எனக் கூட்டுக. ஆசம்செய்து - சிரித்து; நாந்தகம் விதிர்த்து - வாளை வீசி, வாளை அசைத்து எனினுமாம்; அம் என்று - அம்மென்னும் ஒலியுண்டாக உரப்பி; கேசம் - தலைமயிர்; முண்டம் - தலை; நவிர் - வாள்; காதி - வெட்டி; கொன்று எனினுமாம்; விளங்க - பல்லின் ஒளி முகத்தில் விளங்க எனக் கொள்க 10

நின்றவ டன்னைக் கண்டு முண்டனுங் கொடிய னேர
வன்றிறற் காளி யந்த மாவசி யதனல் வீட்டத்
துன்றிய கவனங் கண்டு தொலைகுவ மென்ன வுன்னிச்
சென்றன பயத்தி னேடு மாதிரஞ் செறிந்த மன்னே.

கு - ரை: நின்றவள் - சண்டனைக்கொன்று நின்றவள்; நேர எதிர்க்கவும்; வசி - வாள்; வீட்ட - வெட்டவும்; கவனம் - அசுர சேனைகள்; தொலைகுவம் - (எதிர்த்தால்) நாமும் அழிவோம்; சென்றன - விரைந்து ஓடினவைகளாய்; மாதிரம் செறிந்த - எண்டிசைகளிலும் நெருங்கின. 11

அனையர்தங் கம்மெய் காளி யங்கையி னேந்தி யட்டம்
புனையுமா சத்தி யோடு போந்துசண் டிகையைக் கண்டு
வினைபுரி சண்ட முண்ட வீரராம் பசுக்க ளிற்கு
நனியுப கிருத மாகப் புரிந்தன னற்போர் யாகம். —

கு - ரை: அனையர்தம் - அந்தச் சண்டமுண்டர்களுடைய; கம் மெய் - தலையோடு கூடின உடம்பை; அட்டம்புனையும் ஆசம் - பெருஞ்சிரிப்பு; சண்டிகை - சண்டிகையாகிய தேவி; வினை - தீவினை; உபகிருதம் - பலி.

வி - ரை: நல்ல பசுக்கள் தேவதைகளுக்குப் பலியாகப் பயன்படும்படி வேள்விசெய்யப்படும். ஆதலால் காளியானவள் சண்டமுண்டராகிய பசுக்கள் தேவிக்குப்பலியாகப் பயன்படும்படி போராகிய வேள்வியைச் செய்தேன் என்றனள். சண்டமுண்டரைப் பசுக்கள் என உருவகம் செய்ததற்கு ஏற்பப் போரினை வேள்வியென்று உருவகம் செய்யப்பட்டுளது. 12

கொடுந்தொழிற் சும்ப னோடு நிசும்பனைக் கொல்வாய் நீயென், றடும்படைப் பகைவர் தம்மைக் காளிதா னறைத லோடும், விடம்புரை யனையர் தம்மை மெல்லிய னோக்கி யின்னோர்க, கடந்தமை யானீ பூவிற் சாமுண்டி யாவாய் காளி.

கு - ரை: பகைவர்தம்மை அடும்படைக் காளி; நீ கொல்வாய் என்று அறைதலோடும் எனக் கூட்டுக.

நீ - சண்டிகையாகிய நீ; மெல் இயல் - மென்மையான சாயலையுடைய சண்டிகையானவள்; அனையர் தம்மை - அந்தச் சண்டமுண்டர்களின் உடல்களை; இன்னோர் - இந்தச் சண்டமுண்டர்களை; கடந்தமையால் - கொன்றதனால்; சாமுண்டி ஆவாய் - சாமுண்டியென்னும் பெயருடையவளாக ஆவாய்.

வி - ரை: காளி சண்டிகையை நோக்கிச் சும்பநிசும்பரை நீ கொல்வாய் என்றாள். சண்டிகை காளியை நோக்கி நீ சண்டமுண்டரைக் கொன்றதால் சாமுண்டி என்னும் பெயருடையவளாவாய் என்றாள். 13

என்றருள் புரிந்தா ளமமை யிவற்றையோர்ந் திடுதி ரென்று, வொன்றிய நயத்தி னோடு முறுவர்கோ னெழிலோ ரேழாத, துன்றிய வத்தி யாயஞ் சொற்றனனினிமே லுங்கட், கென்றுமே யழியாக் கன்னி யியற்றிய வாடல சொல்வேன்.

கு - ரை: உறுவர்கோன் - முனிவர் தலைவன்; சுமேதச முனிவன்; அழியாக்கன்னி - நித்தியகன்னிகையான சண்டிகை; ஆடல் - வெற்றிசசெயல்கள்; திருவிளையாடல்கள் என்னலுமாம.

ஏழாவது அத்தியாயம் முற்றிற்று.

8 இரத்தபீசன்வதையுரைத்த அத்தியாயம்

வலியுறுஞ் சண்ட முண்டர் மாப்படை யோடும் போரிற், றொலைவுறு தன்மை கேட்டுச் சுமபனுஞ் சினமேற் கொணடு, மலைவுறுந் தலைவ ரோடு வன்பதா கினிதுண் ணெனனத், தலமிசை வருக வென்று சாற் றினன் கூற்ற மஞ்ச.

கு - ரை: வலி - பலம; மா - பெருமை; மலைவுறும் - போர் செய்வதற்குரிய: தலைவர் - சேனைத்தலைவர்கள். பதாகினி- சேனைகள; துண்என - விரைவாக: தலம் மிசை - பூமியின்மேல். வருக - (போர்க்கோலத்துடன்) வரவேண்டும். 1

மைந்துறு திதியின் மைந்த ராமுதா யுதர்கண் மண்மே, னந்தெண்பத் தாறு மொய்க்க நாலொடெண் பதுகம் பெண்ணார், மூந்துறு மசுரர் சேர மொழிகோடி விரி யப்பேர், வந்திடு மசுரர் தஙக ளைம்பது குலங்கண மன்ன.

கு - ரை: மைந்து - வலிமை; உதாயுதர் - உதாயுத ரென்னும பெயரினையுடையவர்கள எண்பத்தாறுபேர்: மொய்க்க- (போருக்குத்) திரண்டுவருக; கமபு - கமபு என்னும் குலத்தைச் சேர்ந்த, நாலொடு எணபது எண்ணார - எண்பத்து நான்கு

என்னும எண்ணிக்கையுடையவர்கள்; சேர - போரிற் சேருக; கோடிவீரியர்பேர் - கோடிவீரியர் என்னும் பெயரையுடைய அசுரர்களின்; மன்ன - போரில் பொருந்துக.

வி - ரை: நாலொடு எண்பது கம்பு எண்ணூர் என்பதற்கு எண்பத்துநான்கு சங்கம என்னும எண்ணிக்கை உடையவர் எனவும் கூறுவர். 2

வெற்றிசேர் தௌமி ரன்மார் குலஞ்சத மேவ வேண்டா, ரற்றிடச் சங்கி ராமத் தடர்ந்திடுங் கால கன்மார், சொற்றெளர் கிருத ரோடுமௌரியர் துகளில் சீர்த்தி, பெற்றிடுங் கால கேயர் பெயர்கபோர்க கோலத் தோடும்.

கு - ரை: தௌமிரன்மார் - தூமரவம்சியன்மார்களுடைய; குலம் சதம மேவ - நூறுகுலமும போருக்குப் புறப்பட்டும; வேண்டார் - பகைவர்கள்; சங்கிராமம் - போரில்; அடர்ந்திடும் - கொல்லுகிற; காலகன்மார் - காலகர்களும; தௌர்கிருதர் - தௌர்கிருதரென்பவர்களும(ஹருத்தின்பிள்ளைகள்);காலகேயர் - காலகையின் பிள்ளைகள்; பெயாக - போர்க்குப்புறப்படுக. 3

இவ்வண்ண மசுரர் தங்கட் கிறையவன் வெம்மை சேரும், எவ்வமா ராணை கூறி யெண்ணில படைகள் சூழ, வவ்வைபாற் சமர்கு றித்தே யடைந்தன நயனந் தன்னிற், கவ்வைமிக கிடவே யோரிச் சாலங்கள் கரைந்த வன்றே.

கு - ரை: இறைவன் - சும்பன்; எவ்வமஆர் - கேட்போருக் குத் துன்பம தருகின்ற; வெமமைசேரும ஆணை - உக்கிரமான கட்டளை; அவ்வைபால் - சண்டிகாதேவியினிடம; அயனம் - வழி; கவ்வைமிக்கிட - துன்பங்கள்மிகுதறகு; ஓரிசசாலம - நரிக்கூட்டம்; (ஓரி - ஒருவகை நரி); கரைத்த - கத்தின, ஊளையிட்டன.

வி - ரை: ஒருகாரியத்தின்மேற் செல்வோருக்கு வழியில் நரிகள் ஊளையிடின் துன்பங்கள் மிகுதியுண்டாம என்பது சகுன நூற் பொருள். 4

துன்னி மித்தமிவ் வாறுபற் பலவவண் டோற்ற
அன்ன வுட்கொளா திமவரைச் சாரலை யடைந்தான்
என்னை யாளுடை யிறைவியு நோக்கியே யிறையிற்
றன்ன வார்தவர் வடவொலி செயச்சகந் தளர்ந்த.

கு - ரை: துர்நிமித்தம் - தீசசகுனம்; அன்ன - அச்சகுனத்தின் பொருளை; இறைவி - சண்டிகை; நோக்கி - (கம்பன் சேனைகளுடன் போருககுவருவதைப்) பார்த்து; இறையில் - விரைவாக; வார் - நீளம்; தவர்வடம் - வில்லின் கயிற்றிலிருந்து; தன்னம் - சிறிது; ஒலிசெய் - ஒலியுணடாகுமபடி செய்ய; (குணத்தொனி செய்ய); சகம - உயிர்கள்; தளர்ந்த - (அப்பேரொலியால்) தளர்ச்சியடைந்தன. 5

மதுப தித்தொனி கண்டைசங் காளியின் மன்னும்
விதமு றுஞ்சுமை யாலமை வென்றனண் மிக்க
குதுக லத்துடன் கேசரி யொலித்தது கோவெண்
விதிய ரீசனும வலாரியும் விசாகனும மன்னோ.

கு - ரை: அம்மை - சண்டிகையானவள்; மதுபதிதொனி - காளியினுடைய பெரிய சப்தத்தை; கண்டை - மணி; சுமமை - பேரொலியால்; கேசரி - சிங்கம; எணகோவிதி - எட்டுக்கண்களை உடைய பிரமனும; அரி - திருமாலும; ஈசனும் - சிவபிரானும்; வலாரி - இந்திரனும்; விசாகனும் - முருகனும.

வி - ரை: சண்டிகையானவள் மணிமுதலியவற்றின் சப்தஸ்களால் காளியின் சப்தத்தைச செயித்தாள். இச்செய்யுள் குளகம். விசாகனும் ஆகிய அமரர் என அடுத்தகவியில் கூட்டுக. 6

அமரர் தாமுத யத்தினை யடையவு மசுரர்
சமரின் மாளவுந் திருவுள முன்னினர் தநதார்
விமல மாமதி வீரிய மாதரை மெய்யி
லமர்பு ரிந்திடத் தோற்றமும் வடிவமு மறைவாம்.

கு - ரை: தாம - தாங்கள்; உதயம - சிறப்பு; முன்னினர் - நினைத்தவராய், அதிவீரியமமாதரை - அதிக வீரியத்துடன் கூடிய

தமது சக்திகளை; மெய்யில்தந்தனா - தம்முடம்பினின்றும் வெளி வரச்செய்து (தேவிக்கு அனுகூலமாக) அசுரருடன் போர் புரிதற்குக் கொடுத்தார்கள்.

வி - ரை: "ஆணெலாஞ் சிவமே பெண்ணெலாஞ் சத்தி" என்பவாகலின் ஈங்குத்தேவசக்திகளை மாதர் என்றார். 7

உலக ளித்திடுஞ் சத்திக ளியாவரு முரைத்த
புலவர்கா யத்தி லவரவர் படைக்கலம் பூணு
மிலக வேயணிந் தெய்தின ரக்கதந் தெழில்சேர்
சலமு றுங்கமண் டலமஞ்ச யானமேற் சார்ந்தாள்.

கு - ரை: உரைத்த - தத்தமக்குரியவாகச் சொல்லப் பெற்ற; புலவர் காயம - தேவர்களின் உடம்பு; அவரவர் - அந்தந்தத் தேவருக்குரிய; படைக்கலம - ஆயுதங்கள்; பூண் - ஆபரணம்; எய்தினர் - சண்டிகையினிடம் வந்தார்கள்; அக் கதந்து என்பது முதல் அடுததகவியில வரும பிராமாணியா மன்னை என்பது வரையிலும பிரமசத்தியின் வருகை சொல்லப் படுகின்றது; அக்கதந்து - அட்சசூத்திரம; பதுமமாலை; கமண் டலம - கமண்டலம என்னும பாத்திரம; (இவற்றைத்தரித்து) அஞ்சயானமேல் - அன்னவாகனத்தின்மேல் ஏறிக்கொண்டு.

வி - ரை: பிரமா முதலிய தேவர்கள் பிரமாணி முதலிய தம்முடைய சத்திகளின் மூலமாகவே உலகங்களை இரட்சிக்கின் றார்களாதலினல் 'உலகளித்திடுஞ சத்திகளென்றார்' சார்நதாள் என்னும் பயனிலைக்கு அடுத்த கவியில் வரும அன்னை என்பது எழுவாயாம. 8

அயன்வ லிச்சுடர்ப் படைப்பிர மாணியா மன்னை
சயமு றும்மிறன் மேற்கொடு சூலமா பாந்த
ளியலொ டுந்தரித் திந்துவின் றுணியொடு மெனையாண்
மயமு றுமமகே சன்மனைக் கிழததியும வந்தாள்.

கு - ரை: அயன்வலி - பிரமனுடைய சத்தியாகிய; படை - ஆயுதந்தரித்துள்ள; பிரமாணியாம் அன்னை - பிரமாணியென்னும்

பெயருடையவளாகிய உலகமாதா; மகேசன் மனைக்கிழத்தி - சிவ சக்தி; இருல்மேறகொடு - எருத்தின் மேலேறி; மாபாநதள் - பெரியபாமபுகளை; இநதுவின் துணியொடு தரித்து - சந்திர கண்டததுடனே உடமபில் அணிநதுகொண்டு.

வி - ரை: மகேசசக்தி சந்திரகலையைத் தலையாபரணமாக வும், தட்சகன் அனநதன் என்னுமஇவ்விரு பாமபுகளை வளையல் களாகவும அணிந்துள்ளவள். சயம் - வெற்றி; மயம் - அழகு; நிறைவுமாம. 9

குமர னில்லவள் கொற்றவேற் படையொடுங் கோதில்
விமல மாஞ்சிகா வளத்திவர்ந் தெய்தினள் விண்டு
நிமலை யாழிகம் பொடுகதை சார்ங்கநே ரிலசி
கமல நேரகரத் தேந்தியே கருடன்மேல் வந்தாள்.

கு - ரை குமரன் இல்லவள - குமாரசக்தி; கௌமாரி; சிகா வாளம - மயில்; இவர்நது - ஏறிக்கொண்டு; விண்டுநிமலை - விஷ்ணு சக்தி; ஆழி - சககரம; கமபு - சங்கு; கதை - தண்டு; சார்ங்கம் - வில்; அசி - வாள்; இதில் திருமாலுக்குரிய பஞ்சாயுதங்கள் கூறப்பட்டிருத்தல் காண்க. 10

கோல மார்மகக கிடியுரு மாதொடுங் கோரஞ்
சால மேவுறு நாரசிங் கியுமவண் சார்ந்தார்
பாலின் வெண்டந்தி மிசைகுலி சப்படை யோடுந்
தால மூந்நடுங் கிடச்சசி தசசத நயனி.

கு - ரை: கோலம் ஆர் - அழகுபொருந்திய; மகம் - யாகாங் கத்தினல் கற்பிக்கப்பட்ட; கிடி உருமாது - வராக வடிவமுடைய வாராகி சக்தி; நாரசிங்கி - நரசிங்க சக்தி; அவண் - சண்டிகாதேவி யிருக்கும அவ்விடத்திற்கு; வெண்தந்தி - வெள்ளையானை; ஐரா வதம; குலிசமபடை - வசசிராயுதம; தாலம - பூமியிலுள்ளவர்கள்; சசி - இநதிராணியாகிய; தசம சதம நயனி - ஆயிரம கண்களை உடைய இந்திர சக்தியும், அடைநதிடுபகாலை என அடுத்த பாட்டில் முடிக்க. இதுவும் குளகம. 11

உ-ம்: அம்மா கொற்றா எனவரும. (௧௫௬)

தநநு எஎன அவைமுத லாகித்
தன்மை குறித்த னளரவெ னிறுதியும்
அன்ன பிறவும் பெயர்நிலை வரினே
இன்மை வேண்டும் விளியொடு கொளலே. 157

என் - எனின் இதுவும் உயர்திணைப்பெயருள் விளியேலாதன கூறுதல் நுதலிற்று.

இ-ள்: த, ந, நு, எ என்று சொல்லப்பட்ட அவ்வெழுத்துக்களை முதலாகவுடையவாகி, ஓர் தொடர்ச்சித தன்மையைக் குறித்த ன, ள, ர என்னும ஈற்றெழுத்தினையுடைய பெயர்களும் அத்தன்மையான பிறபெயர்களுமாயுள்ள பெயராகிய நிலைமையையுடைய சொறகள வரின், மேல் விளியேற்கும எனப்பட்ட பெயரொடு விளிகோடல் இல்லாமையை வேண்டும் ஆசிரியர் என்றவாறு.

உ-ம்: தமன், தமள், தமர்; நமன், நமள், நமர்; நுமன், நுமள், நுமர்; எமன் எமள், எமர்; எனவும், பிறவும் என்றதனன், மற்றையான மற்றையாள் மற்றையார், பிறன் பிறள் பிறர் எனவும் வரும

இவற்றை உயர்திணைப் பெயர்களோடு கூறாது ஈண்டுக கூறியது என்னை எனின், இவை ஓரினத்துட் பட்டு இயைந்து வருதலான் ஈண்டுப் போதந்துடன் கூறினர் எனக் கொள்க. (௧௫௭)

விளிமரபு முற்றும்.

5. பெயரியல்

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே. 158

என்பது சூத்திரம்.

இவ்வோத்து என்னை பெயர்த்தோ வெனின் பெயரிலக்கணம உணர்த்தினமையின் பெயரியல் என்னும் பெயர்த்து. மேலோத்திேனாடு இயைபு என்னை எனின் பெயரிலக்கணம உணர்த்தி அவ்விலக்கணமுடைய அவ்வியற்பெயர் இவை யென்றவற்றது பகுதி யுணர்த்திய எடுத்துககொண்டார் என்பது.

இனி, இம்முதறசூத்திரம என்னுதலிற்ரோ எனின் நான்குவகைப்பட்ட சொலவிற்கும் பொதுவாயதோர் இலககணம உணர்த்துதல நுதலிற்று.

இ - ள்: தமிழ்ச் சொலலெலலாம ஒரு பொருள் உணர்த்துதலைக கருதியே நடககும; பொருளுணர்தது தலைக கருதாது நடப்பன இல்லை என்றவாறு.

உ - ம்:- சாத்தன், கொற்றன் என அவ்வப்பெயர் கள அவ்வப் பொருள்களை உணர்த்தின. உண்டான் தின்ரான் என அவ்வவ் வினைச்சொற்கள் அவ்வவ் வினையை உணர்தகின, அதுமன உறுகால எனவும, சென்மதி தவச்சேய்நாட்டார் எனவும் வருமிவை அவ் விடையும் உரியும் அவ்வப் பெயர்வினைகளை யடுத்து நின்று ஒருபொருளை உணர்த்தின.

மற்று, இஃது " ஆயிரு திணையின் இசைககுமன சொல " என்புழி அடங்கிற்றுப் பிற எனின், ஆண்டு எல்லாச் சொல்லும ஒருதலையாகப் பொருளுணர்தறும என்னும் துணிபு விதியின்மையின ஈண்டுககூறினர் என்பது. மற்று அசைநிலை இடைச்சொற்கள் பொருள்

உணர்த்தாவால் எனின், அவையும் ஒருவாற்றான் சிறு பான்மை பொருளுணர்த்துமெனவுணர்க. அலலதூஉம் இது பெரும்பான்மையெனினும் அமையும் என்பது.

முயற்கோடு என்னும் தொடக்கத்தன பொருள் உணர்த்தாவால எனின், இவை நன்மக்கள் வழ.........
பொருண்மை திரிந்து முயற்கோடு இல்லை யெனப் பின்வருஞ் சொல்லோடு படுத்து நோககி அவறறது இன்மைவிளககி வந்ததாம. இனி இறிஞி, மிறிஞி, எனனும தொடககத்தன பொருள் விளககாவாலெனின, அவை நன்மககள்.................என்பது. (க)

பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லி னாகும் என்மனார் புலவர். 159.

என் - எனின், இதுவும் அச்சொற்கள் பொருள் உணர்த்தும்வழிக் கிடநததோர் இலககணம் உணர்த்தல நுதலிற்று.

இ - ள்.- பொருள் தெரிய நிற்றலும் அப்பொருளை அறியப்படாது சொற்கள் தெரிய நிறறலும் என்னும இவையிரண்டும சொற்களேதுவாக உளவாகும என்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

பொருண்மை தெரிதற்கு உதாரணம் மேற் காட்டினவே. சொன்மை தெரிதற்கு உதாரணம பெயர்ச் சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல், பெயரெச்சம, வினையெச்சம, முற்றுச்சொல் என. இவை அவ்வச் சொற்களையே பொருளாக உணர்த்தின எனக கொளக. மற்றிதும் பொருண்மை தெரிதலேயாம் பிற எனின தாம பொருண்மை... .....ழிச்சொல்லென வேறு பட்டு நிற்குமாகலின் இதனை வேறுகூறினர் என்பது.

மற்று ஒருசொல் தன்னின் வேறாயதோர் சொல்லைப் பொருண்மையாக உணர்த்தாது வேறெனகிளவி

யென்றாற்போல அச்சொல் தன்னையே உணரநிற்றலும் உண்டாமென்ன அதுவுஞ் சொன்மைதெரிதல் என அடங்கிற்றுப் போலும். மற்றும் மேல் எய்திய பொருண்மைதெரிதல ஈண்டுக் கூறல்வேண்டா எனின் முற்கூறியதில் பிற்கூறியது வலியுடைத்து ஆகலின் அஃது விலக்குண்ணும் என உம்மை கொடுத்தாயினும் ஓதற்பாலாவதான தன்குண தற்பொருட்டு உடனேதினர் என உணர்க. (உ)

தெரிபுவேறு நிலையலும் குறிப்பிற் றோன்றலும்
இருபாற் றென்ப பொருண்மை நிலையே. 160.

என் - எனின், இதற்கும் அக்கருத்து ஒக்கும்.

இ - ள்:- இச் சொல்லினது பொருள் இது எனத் தெரிந்து வேறு நிற்றலும், அவ்வாறன்றிச் சொல்லு வான் குறிப்பினான் இச்சொல்லினது பொருள் இது என அறிய நிற்றலும் என இருபகுதிற்று என்று சொல்லுவர் ஆசிரியர் என்றவாறு.

உ - ம்:- இடா, கிடா என்பன தெரிபு வேறு நிலையல். சோறுண்ணு நின்றான், கற்கறித்து நன்கு அட்டாய் என்றல் குறிப்பிற்றோன்றல். (௩)

சொல்லெனப் படுப பெயரே வினையென்
றாயிரண் டென்ப அறிந்திசி னோரே. (161)

என் - எனின், மேற் பொருளுணர்த்து மெனப்பட்ட சொல்லிற்குப் பெயரும் முறையும் தொகையும் உணர்த் தல் நுதலிற்று.

இ - ள்:- சொல்லென்று சிறப்பித்துச் சொல்லப் படுவன பெயர்ச்சொல்லென்னும், வினைச் சொல்லென் னும் அவை யிரண்டுமென்று சொல்லுப இலக்கணம் அறிந்த ஆசிரியர் என்றவாறு.

பெயர்ச்சொல் பொருளை உணர்த்துதலின் முற்கூறப்பட்டது. வினை பொருளது புடைபெயர்ச்சியாகிய தொழிலினை உணர்த்தலின சிறபபினவலல என்று பிறகூறப்பட்டது. என சிறப்பினகண வநதது. (ச)

இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்
அவற்றுவழி மருங்கின் தோனறும் எனப. 162.

என் - எனின், இறந்தது காத்தலை நுதலிற்று.

இ - ள்:- இடைச்சொல்லாகிய சொல்லும் உரிச்சொலலாகிய சொல்லும பெயாவினைகட்கு இடமாகிய இடத்தே தோனறும; தாமாகத் தோனறா என றவாறு.

இடைசசொல் முறகூறிய காரணம எனனை எனின் எழுகூறறதாகிய வழககுப்பயிற்சி நோககி என்க.

மருங்கு என்றதனன் அவ்விடை யுரிகள் பெயர் வினைகளை அடைந்து தோனறுங்கால தமமருஙகினுல தோனறுதலும பெயரதும வினையதும மருஙகினுல தோனறுதலும என இருவகை எனபது கொளளப் படும. அதுமன, உறுகால் எனபன தமமருஙகிற் ருேனறின. அவள, அவன, உணடான, உணடாள எனபன அவறறுமருங்கிறருேனறின. இத்துணையுங் கூறியன நானகு சொலலிறகும பொதுவிலககணம; மேற்கூறுகினறது பெயரிலககணம் என உணர்க. (ரு)

அவறறுள்,
பெயரெனப் படுபவை தெரியுங் காலை
உயர்திணைக் குரிமையும் அஃறிணைக குரிமையும்
ஆயிரு திணைககுமோ ரன்ன உரிமையும்
அமமூ உருபின தோன்ற லாவே. 163.

என் - எனின், நிறுத்த முறையானே பெயர்ச் சொற்களது பெயரும் முறையும தொகையும உணர்த்தல் நுதலிற்று.

இ - ள்:- மேற் சொல்லப்பட்ட நான்கு சொல் லுள்ளும் பெயர்ச்சொலலென்று சொலலப்படுவன வற்றை ஆராயுங்காலத்து உயர்திணைககு உரிமையும, அஃறிணைககு உரிமையும, அவவிருதிணைககும ஒதத உரிமையுடையனவும் என அமமூனறு கூறறன அவை தோன்று நெறிககண எனறவாறு. அப்பெயர் பெயர்; அம்முறைமுறை; அததொகை தொகை என உணர்க.

இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவிக்கும்
உரியவை உரிய பெயர்வயி னான. 164.

என் - எனின், இதுவும பெயர்ககண்ணே கிடந்த தோர் இலககணம உணர்ததல நுதலிறறு.

இ - ள்:- இருதிணையினினறும பிரிந்த ஐம்பாற் பொருட்கும் ஒருபாற்குரிய தொழிலகள் ஏனைப்பாறகும உரியவாம். இவ்வாறு உரியவாவது எசசொலலிடததோ எனின், வினைசசொலலிடததாகாது பெயர்ச சொலலிடத் தேயாம என்றவாறு.

நஞ்சுண்டான் சாம், நஞ்சுண்டாள சாம், நஞ்சுண் டார் சாவர், நஞ்சுண்டது சாம, நஞ்சுண்டன சாம என பது. மற்று அவ்வாணபான்மேற கூறறக்குரிய சாதலென் னும்வினை மற்றை நான்குபாற்கண்ணும தனித்தனி கூறாமல் சென்றதெனை உணர்க. உண்டான் என்பதனை படுத்தலோசையாற் பெயராக்கிக கொள்க.

பார்ப்பான் கள்ளுண்ணான் என்பது கள்ளுண்டல் அதற்கு இன்மையின் அஃறிணைப்பான்மேற் செல்லா தாயிறறு.

அவ்வழி,
அவனிவன் உவனென வரூஉம் பெயரும்
அவளிவள் உவளென வரூஉம் பெயரும்
அவரிவர் உவரென வரூஉம் பெயரும்
யான்யாம் நாமென வரூஉம் பெயரும்
யாவன் யாவள் யாவர் என்னும்
ஆவயின் மூன்றோ டப்பதி னைந்தும்
பாலறி வந்த உயர்திணைப் பெயரே. 165

என் - எனின், நிறுத்த முறையானே உயர்திணைப் பெயர் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: அவ்வாறு மூன்று கூற்றவாய் நின்ற பெயர்களிடத்து அவன எனபது முதலாக உவர் என்ப தீரூக ஓதப்பட்ட சுடடுப்பெயர் மும்மூன்று என்பதும், யான என்னுந் தனிததன்மைப் பெயர் ஒன்றும், யாம் என்னும படர்க்கையுளப்பாடடுத் தன்மைப் பெயர் ஒன்றும, நாம என்னும முன்னிலை யுளப்பாட்டுத் தன்மைப்பெயர் ஒன்றும, யாவன் யாவர் யாவள் என்று சொல்லப்படுகின்ற அவ்விறுவிடத்துப் பெயர் மூன்று மாகப் பதினைந்தும ஒருவன் ஒருததி எனப் பாலறிய வந்த உயர்திணைப் பெயராம எனறவாறு. (அ)

ஆண்மை அடுத்த மகனென் கிளவியும்
பெண்மை அடுத்த மகளென் கிளவியும்
பெண்மை அடுத்த இகர விறுதியும்
நம்மூர்ந்து வரூஉம் இகர ஐகாரமும்
முறைமை சுட்டா மகனும் மகளும்
மாந்தர் மக்கள என்னும் பெயரும்
ஆடூஉ மகடூஉ ஆயிரு கிளவியும்
சுட்டு முதலாகிய அன்னும் ஆனும்
அவைமுத லாகிய பெண்டென் கிளவியும்

ஒப்பொடு வருஉம் கிளவியொடு தொகைஇ
அப்பதி னைந்தும் அவற்றோ ரன்ன. 166

என் - எனின், இதுவும் உயர்திணைப்பெயர் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள். ஆண்மை என்னுஞ் சொல்லை முன்னடுத்த ஆண்மகன் என்னும் பெயர்ச்சொல்லும், பெண்மை என்னும் சொல்லை முன்னடுத்த பெண்மகள் என்னும் பெயர்ச் சொல்லும், பெண்மை என்னும் சொல்லை முன்னடுத்த பெண்டாட்டி என்னுஞ் சொல்லும் நம் என்பதை அடுத்துவருகின்ற இகர ஐகாரவீற்று நம்பி நங்கை என்னும்பெயர்ச்சொற்களும், முறைப் பொருண்மையைக் கருதாத மகன் மகள் என்னும் பெயர்ச்சொற்களும், மாந்தர் மக்கள் என்னும் பெயர்ச்சொற்களும் ஆடூஉ, மகடூஉ வாகிய அவ்விருவகைச்சொற்களும், சுட்டெழுத்தாகிய அகரத்தை முதலாகவுடைய அவ்வாளன், இவ்வாளன், உவ்வாளன் என்னும் அன்னீற்றுப் பெயர்ச்சொல்லும், அம்மாட்டான், இம்மாட்டான், உம்மாட்டான் என்னும் ஆனீற்றுப் பெயர்ச்சொல்லும், இன்னும் அச்சுட்டெழுத்தை முதலாகவுடைய அவ்வாட்டி, இவ்வாட்டி, உவ்வாட்டி எனப் பெண்டாட்டியென்னும்பொருண்மை உணரவரும் பெயர்ச்சொல்லும், பொன்னன்னன், பொன்னன்னள், பொன்னன்னர் என ஒப்புப்பொருண்மையோடுவரும் பெயர்ச்சொலோடு தொகக பதினைந்துசொலலும மேற்கூறிய பெயரே போலப்பாலறிவந்த உயர்திணைப் பெயராம் என்றவாறு

எல்லாரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்
எல்லீரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்
பெண்மை அடுத்த மகனென் கிளவியும்
அன்ன இயல என்மனார் புலவர். 167

என் - எனின், இதுவும் உயர்திணை யொருசார் பெயர்களை உணர்த்தல் நுதலிற்று.

श्रवणाङ्गुष्ठसंयोगाद्यः शब्दः संप्रजायते ।
दीप्तवह्निशिखातुल्यो घोष इत्यभिधीयते ॥
घोष्यते च तु यः शब्द ईषन्मन्दो विभाव्यते ।
भि(न्न)कांसधरोरूक्षो रवेति परिकीर्तितः ॥
ततो वंशध्वनिः सूक्ष्मो निवातवर्षोपमः ।
स स्वनः परमः सूक्ष्मो यत्तत्पदमनामयम् ॥
चतुर्थं तु महच्छब्दः सर्वार्थप्रविचारणः ।
(स) शब्दः साधयेत्सर्वं योगिनस्तु न संशयः ॥
पञ्चमं स्फोटशब्दं तु........योगिहितावहम् ।
मनोह्लादक(रं) नृणां स्फोटशब्द इति स्मृतः ॥
शब्दतत्वे संप्रलीनः शब्दान्तर्गतमानसः ।
परां सिद्धिमवाप्नोति स्फोटः सर्वार्थसाधकः ॥
वंशध्वनिविनिर्मुक्तो यः शब्दः संप्रवर्तते ।
शाश्वतोऽनादिरव्यक्तः स शब्दो ध्वनिलक्षणः ॥
मृदुवीणास्वनः शब्दः शान्तघ ....नादितः ।
कुसुमामोदमत्तानां षट्पदानामिव ध्वनिः ॥
झङ्कारस्तु (त) तः शब्दः शब्दानां लयमालयम् ।
स शिवः शिवतत्वस्थो हुङ्कृतः प्रणवः स्मृतः ॥
अष्टौ शब्दा परा देवि समाख्याताः समासतः ।
सेवितव्याः प्रयत्नेन यदीच्छेत्सिद्धिमात्मनः ॥

என்று அறியத்தக்கது.

இந்த நாதத்திற்குச் சிரவணம் அபிவியத்திஸ்தாந மாகலின் சிரவணாங்குஷ்டாதிப் பிரயோகங்களாலங்கே அபிவியத்தமாம் என்பது. அது,

श्रोत्रारन्ध्रौ तथाङ्गुष्ठौ घ्राणमङ्गुलिभिस्तथा ।
ततोऽस्य सर्वतोव्यापि ध्वनिरूपं विजृम्भते ॥
भुक्तं भुक्तं पचत्यग्निर्जठरस्थः शरीरिणाम ।
तस्य तेन प्रयोगेन शब्दमाहुरकृत्रिमम ॥

என்பதனால் உணர்க. இனி, இது சப்த பிரமம் என்பது,

अनुच्चार्यमसन्दिग्ध(म) प्रत्यक्षं सनातनम् ।
स्वनरूपं स्वदेहे तु नित्य (मिन्य) मुच्चरति स्वयम् ॥
तत् शब्दं यत्तु सूक्ष्मं च शब्दब्रह्मेति कथ्यते ।
तच्छब्दब्रह्मगत्यासावतिसूक्ष्मतरः शिवः ॥
नादोऽयं बिन्दुरूपेण दशधा च विभज्यते ।

என்பதனால உணர்க. இனி அபர பிந்துவும் அவ்வாறு நயனோத்வாநாதிகளாலே தெரிசிக்கப்படும். அதுவும் நிச்சுவாஸகாரிகையிலே,

रात्रौ शयनकाले तु प्रविश्याभ्यन्तरं विना ।
विना दीपादन्धकारे उद्वर्त्य नयने सकृत् ॥
ततस्तान्नेत्रजान्दीपान्तत्तद्वलयसन्निभान् ।
सौदामिनीव चपलान्दृष्ट्वा दृष्ट्वा प्रणश्यति ॥
प्रयोगमेतत्सततं कृत्वा कृत्वा तु विश्रमेत् ।
स्थित्वा कालान्तरं किञ्चित्तान्येवाभ्यासतः पुनः ॥
यथा यथा तु चाभ्यासं कुरुते साधको निशि ।
तथा वर्धति तत्तेजस्तैले बिन्दुरिवाम्भसि ॥
पश्यतेऽन्याव्रतादेशः स्फुलिङ्गा इव काञ्चने ।
तानेव तु ग्रहान्विद्वान्पश्यते न च संशयः ॥

என வருமாற்றான் உணர்க. எனவே அபரவிந்துவின் காரணமான அபரநாதத்திற்கு ஸ்பர்சமென்னும் சத்தி தத்துவம் காரணம. அது சிவ தத்துவததின் காரியம் எனவே अशुद्धं समवायतः என்றமையால அந்தச் சிவ தத்துவத்திற்குக காரணம் கலககப்படாத சுத்த மாயை என்க. இதனனேயனறே அந்த சுவச்சந்தவைரவத்தில் தத்துவவிஞ்ஞானபடலததில்,

वंशध्वनिस (मः) प्रख्यः शान्तनादस्तु सं .... ।

எனவும்,

चन्द्रमण्डलसंकाशं विद्युत्पुञ्जनिभेक्षणम् ।
तारकाचलिताकारं बिन्दुदेवं विवक्ष(र्त)येत् ॥

எனவும் கூறியபின்னர், மேற்கூறத் தொடங்குவான்,

बिन्दुध्यानं समाख्यातं शक्तिवक्ष ... बोधयेत् ।

என்றற்றொடககத்தால் பரபிந்து பரநாத தியானதி கூறுவதாஉம. இந்த சுவச்சந்தத்தில் சிவதத்துவத்தை சூன்யமென்றது சூன்யமான லயசிவாதிட்டானத்தான மாகலின். அன்றித் தனககு மேலான தத்துவ ஸ்பரிச மின்மையின் எனினுமாம். சத்தி தத்துவத்தை ஸ்பரிச மென்றது ....சிவன் சத்தியாதிககியமாய் பரிசித் தலின்; அது சத்தியதிட்டானததானமாகலின். அன்றித் தனககு மேலான தத்துவ ஸ்பரிசமுணடாகலின் ஸ்பரி சம என்றதெனினுமாம. பிறவாறுமுளவேற் காண்க. இவ்வாறனறி, சூனியம் உன்மனே பரிசம் சமனே என்பது கூடாது. அவை சிவதத்துவககலையாகலிற் றத்துவத் தோற்றத்திற் கூறப்படாமையின். அது,

व्योमरूपादि षट्कं स्यान्परनादकलात्मकम् ।

என வருமாற்றான் உணர்க. அவ்வாறாயிற் சத்தி தத்து வாதி கலேகட்கும தோற்றம் கூறவேண்டும் என்க. இனி "அன்னதுநா னெட்டுவிதம் பிராசாதத்தடைவின்" என்ப தற்கு வருமாறு:— சுவச்சந்தத்தில்,

बिन्दुः सदाशिवो ज्ञेयस्त्वष्टभेदाङ्ग संयुतः ।
सकलो निष्कलः शून्यः कला ..... कृतः ॥
क्षपणः क्षयमन्तश्च कण्ठोष्ठश्चाष्टमः स्मृतः ।

எனவரும். "பிராசாதத் தலைவின்" என்றது பிராசாத மந்திரங்களுக்கும் எட்டாமென்பதறிவித்தற்கு. மற்றது வெளி. 7

8. * * *

"வருஞ் சுத்த வித்தைதனின் மாயை" என்பது வித்யாதத்துவ ஆன்ம தத்துவம கூறியது. ஈண்டுச் சுத்தத்தில அசுத்தம தோன்றுமென்றது,

ईश्वराच्छुद्धविद्या स्यात्ततो मायासमुद्भवः ।

என்பது சுவச்சந்தமாகலின். இதிலே மற்றவற்றிற்கும்,

ते वै व्रजन्त्यधस्तात्तु घोरे चैवातिदारुणे ।
तस्मात्कला समुत्पन्ना विद्या रागस्तथैव च ॥
कालो नियतितत्त्वं च पुरुषः प्रकृतिस्तथा ।
सत्त्वं रजस्तमश्चैव प्रकृतिस्तु गुणत्रयम् ॥
* * *
बुद्धितत्त्वादहङ्कारः पुनर्जातस्त्रिधा प्रिये ।

எனவரும். மற்றனைத்தும சித்தாந்தம்போற் கூறும் என்க. இவற்றுள் தைசத, வைகாரி யிரண்டினும் மனமாம் என்பது,

उभयात्मकं मनः प्रोक्तं व्याप्य सर्वेन्द्रियाणि तु ।

என்பதனல் உணர்க. 8

9. * * *

"நவிலுமிவை யொருகாலத்து" என்பது தத்துவத் தோற்றத்திற்கு வழுவமைப்பும் அபரவிந்து அபரநாத முதலிய சில தத்துவத்தின் கலைகளாமாறும் கூறு கின்றது. ஈண்டுச் "செயலனைத்தும் சித்தாந்தத்து

நுவன்றபடி" எனப் பிற்பாடு நவின்றதற்கு வருமாறு:—
சித்தாந்தத்தில் சுத்தமாயாவிஷயத்தில் தத்துவப் பிரகாசத்தில், (சு. 33)

शिवतत्त्वं एकमेव तथापि व्यापारवशात् क्रमोत्पत्तिमत् इति कथनं श्रूयते

तत्त्वं वस्तुत एकं शिवसंज्ञं चित्रशक्तिशतखचितम् ।
शक्तिव्यापृतिभेदादस्यैते कल्पिता भेदाः ॥

என்பது. அதுபோல ஈண்டு எல்லாத் தத்துவ விடயங்களிலும் அறியத்தக்கது.

இனிச் "செயலனைத்தும் சித்தாந்தத்து நுவன்றபடி" என்பது மேற் சுவ பக்ஷத்தில் விளங்கும். "இவற்றடங்கப் பிறவும் கூறி" னென்பது இங்ஙனம் கூறு முப்பத்தாறு தத்துவங்களுள் அடங்கும்படி அபரவிந்து கலை முதலானவும் கூறின என்றவாறு. அவைகளும் பிரதானதத்துவம் போலாமோ எனனுமையமறுத்தற்கு. "அபரவிந்து கலை" என்றற்கெடுத்துக்காட்டு வருமாறு:—

निवृत्तिश्च प्रतिष्ठा च विद्या शान्तिर्निरोधिका ।
पश्चिमादि स्थिता दिक्षु शान्त्यतीता तु मध्यमा ॥

என்றபின்,

इच्छारूपः स्थितो देवस्तस्माद्बिन्दुरिह स्मृतः ।

என்புழி,

तस्मात् = सदाशिवतत्त्वात्, ऊर्ध्वं बिन्दुः स्मृतः इह = बिन्दौ इच्छारूपः स्थितो देवः

என்றுணர்க. இனி யபரநாதகலைக்கு வருமாறு :—

इन्धिका दीपिका चैव रोचिका मोचिका तथा ।
एता नादकलाः प्रोक्ता मध्यमा चोर्ध्वगामिनी ॥

என வரும்.

10. * • *

"ஆருமிடை பிங்கலை" என்பது அண்டத்துள்ள நாடிகளும் பரவிந்து பரநாத கலைகளுமாமாறு கூறுகின்றது. ஈண்டு "ஆருமிடை பிங்கலைநற் சுழுமுனை மூன்றும் அக்கினியும..........வாமற் கட்டிநிற்கும்" என்பதற்கு வருமாறு:— சுவச்சந்தத்தில,

ऊर्ध्वगामि कला तस्य नित्यमुत्सङ्गगामिनी ।

என அபரநாதகலை சொன்ன பின்னர்,

ततः सुषुम्ना भुवनं सुषुम्ना तत्र संस्थिता ।
सुषुम्नेशः स्थितस्तत्र चन्द्रकोट्यर्बुदप्रभः ॥
दशबाहुस्त्रिणेत्रश्च श्वेतपद्मोपरि स्थितः ।
शशाङ्कशेखरः श्रीमान्पञ्चवक्त्रो महातनुः ॥
इडा च पिङ्गला चैव वामदक्षिणतः स्थिता ।
सुषुम्ना तु वरारोहे तुषारकणधूसरा ॥
श्वेतपद्मधरा देवी पद्ममाला विभूषिता ।
पञ्चवक्त्रा सुशोभाढ्या त्रिणेत्रा शूलधारिणी ॥
तस्योत्सङ्गगता देवी ध्यातव्या साधकादिभिः ।
ग्रथितास्तु तया सर्वे अध्वानस्तु तदूर्ध्वतः ॥
नाभ्य... ....हित्वा सर्वमिदं जगत् ।
अधः शक्त्या विनिर्गत्य यावच्छक्यं तदूर्ध्वतः ॥
नाड्या ब्रह्मबिले लीनस्त्वव्यक्तध्वनिरक्षरः ।
स नदत्यथ भूतेषु शिवशक्त्या त्वधिष्ठितः ॥
एवं ज्ञात्वा वरारोहे शोधयेत्तु शिवाध्वरे ।

என வருமாற்றான் உணர்க. ஈண்டுத் தொண்ணூற்றாறு தத்துவங்களுள் எண்ணப்படும நாடிகள் மூன்றும் பிண்டத்திலே யன்றி அண்டத்திலும் உள என்பதற்கும், அவை சத்தி தத்துவ கலாபேதம என்பதற்கும்

கூறியவாறு; முன்னர் அண்டத்தினிற்கு மியல்பு கூறி हित्वा सर्वमिदं जगत् என்ற பின்னடி பிண்டத்திற்குமியல்பு கூறுவழி,

अधः शक्त्या विनिर्गत्य यावच्छक्यं तदूर्ध्वतः ।
नाड्या ब्रह्मविले लीनस्त्वव्यक्त ध्वनिरक्षरः ॥
स नदत्यथ भूतेषु शिवशक्त्या त्वधिष्ठितः ।

என குண்டலினிசத்தி ஸ்தானமான மூலாதாரத்தினின்றும் புறப்பட்டு மேலே சத்தி ஸ்தானமான பிரமபிலத்திலே லீனமாம என்றமையானும் சிவசத்தியினல் அதிட்டிக்கப்பட்டது என்றமையானும நாடி சத்திகலா பேதமென்றது. இந்த வைந்தவ காரியமான நாடி ஸ்தூலதேகத்திலே பிருதிவி காரியமான நாடிக்குப் பிராணனும் நிறகும; அக்கினி காரியமான கண்ணொளிக்கு வைந்தவத்தின் ஒளிபோல. இதனனே யன்றே சுழுமுனை......பிரமநாடி உண்டென்பதும்.

अत ऊर्ध्वं स्थिता शक्तिः प्रसुप्तभुजगाकृतिः ।
आधारं भुवनानां तु तां प्रवक्ष्यामि सुव्रते ॥
सूक्ष्मा चैव सुसूक्ष्मा च तथाचान्या मृतामृता ।
व्यापिनी मध्यतो ज्ञेयाः शेषाः पूर्वादितः क्रमात् ॥

என்பதனற் சத்தி தத்துவ கலாபேதமென்பது தோன்றும. இனிச் சிவதத்துவ கலாபேதம் வருமாறு:—

व्यापिनी व्योमरूपं तु अनन्ता नाथानाश्रितम् ।
भौवनं पञ्चकं देवि शिव तत्त्वे व्यवस्थितम ॥

என்பதனனுணர்க. இவை மேலே சித்தியாரிற் கூறுமையின் ஈண்டுச் சிறிது விளங்க உரைத்தவாறு. பிறவும் மேற் புவனவிவேகத்தில விளங்கும். 10

11. * * *

"இப்படி" என்பது பாசபேதத்தில (சிறிது) கூறி மேலான் பேதம் உணர்த்துகின்றது. 11

12. * * *

"பிரதானந் தனையடைந்து" என்பது முன்னர் ஆன்மா ஐந்துவகைப்படும என்றவற்றுள ஆன்மா அந்தராான்மா என்பவற்றின் இயல்பு கூறுகின்றது...... சுவச்சந்தத்தில்,

आत्मोपकारकं चैव कथयामि यथार्थतः ।
आत्मा चैवान्तरात्मा च वाह्यात्मा चैव सुन्दरि ॥
निरात्मा परमात्मा च कथयामि यथार्थतः ।
प्रधानसाम्यमाश्रित्य सुखदुःखविवर्जितः ॥
तदा तस्मिन्स्थितो देवि तदात्मा तु स उच्यते ।
पुर्यष्टकसमायोगाच्चर्यते सर्वयोनिषु ।
अन्तरात्मा स विज्ञेयो निबद्धस्तैः शुभाशुभैः ॥

எனவரும். 12

13. * * *

"இந்திரியம் பத்தினொடும" என்பது வாகியான்மாவும நிரான்மாவுமாமாறு கூறுகின்றது. அது அதிலேயே கூறப்பட்டது.

बुद्धिकर्मेन्द्रियैर्युक्तो महाभूतसमावृतः ।
वाह्यात्मा तु तदा देवि विषयाभोगभाक् सदा ॥
भूतभावविनिर्मुक्तस्तत्त्वकर्मकलोज्झितः ।
मलैकमैकयुक्तात्मा मायाकर्मतिरस्कृतः ॥
निरात्मा तु तदा देवि परमात्माऽथ कथ्यते ।

என்பதனால் உணர்க. 13

வாலாஜாபாத் இந்துமத பாடசாலை



சைதாப்பேட்டை ஆசிரியப்பயிற்சிக் கல்லூரி மாணவர்களுக்கு, குடிமைப்பயிற்சிவகுப்பு வாலாஜாபாத்தில் தொடங்கியபிறகு பாடசாலையைப் பார்வையிடும்போது எடுத்தபடம். இடமிருந்து வலமாக கல்லூரிபிரின்ஸ்பால் வி. ஆர். அரங்கநாதமுதலியார், இந்துமதபாடசாலைத் தலைவர் வா. தி. மாசிலாமணி முதலியார், சென்னை போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் சஞ்சீவிப் பிள்ளை, கல்வித்துறை டிப்டி டைரக்டர் பால், பயிற்சித்தலைவர் டி. டி. தீனதயாளு, கல்லூரிமாணவர்கள் தலைவர் திரு. காஸிம் ஆகியோர்கள் காணப்படுகிறார்கள்.

லஸ்ரீ சண்முகதேசிக சுவாமிகள் இலவச மருத்துவ நிலையத்தில்.

முதலில் பிறந்த குழந்தைகளுக்கு ஆதீனப் பரிசு

ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருவுளம்பற்றிய ண்ணம், கனம் முதன் மந்திரியவர்கள் திறப்புவிழா வைபவத்தில் தெரிவித்தபடி (9—7—51) திங்கட்கிழமை ாலை 5-30 மணிக்கு முதலாவதாகப் பிறந்திருந்த இரண்டு குழந்தைகளுக்குப் பொற்சங்கிலிகள் வழங்கப்பெற்றன.

இந்த நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கியவர்கள் மாயூரம் ரிவினியூ டிவிஷனல் ஆபீசர் A. S. வெங்கடராமன் M. A. வர்கள் மனைவியார் ஸ்ரீமதி சரஸ்வதி வெங்கடராமன் B. Sc. ர்களாவார். அவர்களும் இந்தக்கூட்டத்தில், மாயூரம் முனிஸிபல் கமிஷனர், ஹெல்த் ஆபீஸர் அவர்களும், ஷை பெண்கள் மருத்துவ நிலைய டாக்டர் முதலியவர்களும் கலந்துகொண்டார்கள்.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram, (Mayuram) 9—8—1951.